ஜனவரி - மார்ச் 2022 காலாண்டிதழ் ISSN : 2513 - 2989 ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

KARUVI - CENTRE FOR SOCIAL RESOURSE OF DIFFERENTLY ABLED

LET'S WIN THE WORLD WITH DIFFERENT ABILITIES

# வலு

இதழ் - 33 விலை: 200/-



முற்றத்து மல்லிகை பக்கம் 25

வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் பக்கம் 04

பார்வையற்றவர்களால் படங்களை உணரமுடியுமா? பக்கம் 28

## சாதிப்பதற்கு மாற்றுத்திறன் தடையல்ல..

மனம் திறக்கிறார் ரேகா

சிறுகதை பக்கம் 30

படுதடிகள் துளிர்ப்பதில்லை

ISSN 2513-2989

வெளியீடு : கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

**03. பாலருக்கு ஒரு கதை**

ஒரு காட்டில் எருமைகள் கூட்டமாக வாழ்ந்து வந்தன. இக்கூட்டத்தில் சுமார் 100 எருமைகள் வரை இருந்தன. ஒவ்வொரு நாளும் காலையில் கூட்டமாகச் சென்று புல் மேயும். மதியமானதும் இக்காட்டிலுள்ள குளக்கரைக்கு கூட்டமாகச் சென்று நீர் அருந்தும். மாலையில் கூட்டமாகவே மேயும். கன்றுகள் துள்ளி விளையாடும். இரவானதும் அக்காட்டிலுள்ள மலையடிவாரத்தில் உறங்கும்.

ஒருநாள் அக்காட்டில் ஒரு சிங்கம் பசியுடன் அலைந்து திரிந்தது. அது இவ்வெருமைக் கூட்டத்தைக் கண்டது. ஒரு எருமையினையாவது பிடித்து உண்ண வேண்டும் என்ற எண்ணத்துடன் கூட்டத்திற்குள் நுழைந்தது. சிங்கத்தைக் கண்ட எருமைகள் ஒன்றுகூடி சிங்கத்தை முட்டித் தள்ளி காயப்படுத்தி விட்டன. வலிதாங்கமுடியாத சிங்கம் தப்பினால் போதுமென்று ஒரே ஓட்டமாக ஓடித் தப்பியது.

அன்றிரவு அக்கூட்டத்திலுள்ள எருமையொன்று தானே சிங்கத்தை விரட்டினேன் என்று ஏனைய எருமைகளுக்குக் கூறியது. இனி நான் உங்களுடன் வரமாட்டேன். நீங்கள்தான் எனக்கு உணவு கொண்டு வந்து தர வேண்டும் என்றும் சிங்கம் வந்தால் கூப்பிடுங்கள் வந்து உங்களை காப்பாற்றுவேன் என்றும் சொன்னது. இதைக் கேட்ட ஏனைய எருமைகள் நாம் எல்லோரும் ஒன்றாய் இணைந்து சிங்கத்துடன் போரிட்டதால்தான் வெற்றி பெற்றோம். நீ தனித்திருப்பது ஆபத்தானது. எனவே, எங்களுடன் சேர்ந்து வா என்றன. ஆனால் அந்த எருமை சேர்ந்து செல்ல மறுத்துவிட்டது.

மறுநாள் பொழுது விடிந்ததும் ஏனைய எருமைகள் உணவு தேடிச் செல்ல தயாராகின. அந்த எருமையினையும் தங்களுடன் வரும்படி கேட்டன. ஆனால் அந்த எருமை வர மறுத்துவிடவே ஏனைய எருமைகள் சென்று விட்டன. உணவு தேடிச் சென்ற எருமைக்கூட்டம் தொலை தூரத்துக்குச் சென்றுவிட்டதைக் கண்ட சிங்கம் தனித்திருந்த எருமையை நோக்கி வந்தது. சிங்கத்தைக் கண்ட எருமை கத்தியது. ஆனால் அந்தச் சத்தம் எருமைக் கூட்டத்திற்குக் கேட்கவில்லை. இதனைச் சாதகமாக்கிக் கொண்ட சிங்கம் எருமையின் மீது பாய்ந்தது. எருமையும் சிங்கத்துடன் போராடிப் பார்த்தது. ஆனாலும் அந்த எருமையினால் சிங்கத்தின் பிடியிலிருந்து விடுபட முடியவில்லை. இறுதியில் சிங்கம் அந்த எருமையை வேட்டையாடி தனது பசியினைத் தீர்த்துக் கொண்டது.

ஒருவராகத் தனித்து இருப்பதை விட பலருடன் கூடி வாழும்போதுதான் நமது பாதுகாப்பு பலம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN : 2513 - 2989 ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

# வலு

ஜனவரி - மார்ச் 2022 காலாண்டிதழ் இதழ் – 33

மாற்றுத் திறனாளிகள் தொடர்பான தகவல்களையும்
பொது விடயங்களையும் தாங்கி வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை

பிரதம ஆசிரியர்
திரு. நா. கீதா கிருஷ்ணன்,
karuvivalu@gmail.com
Tel : 076 638 5563

நிர்வாக ஆசிரியர்
திரு. கணபதி சர்வானந்தா
(சிரேஷ்ட ஊடகவியலாளர்)

இதழ் குழு ஆலோசகர்கள்
திரு. க. தர்மசேகரம்
திரு. பாரதி இராஜநாயகம்

ஆசிரியர் குழு
திரு. செ. சசிராஜ்.
திருமதி விமலாதேவி

உதவி ஆசிரியர் குழு
திருமதி ஹே. லுசிந்தன்
செல்வி. ச. றமிதா
செல்வி லோ. டனுசிகா

வெளியீடு
**கருவி மாற்றுத் திறனாளிகளின்
சமூக வள நிலையம்,**
இல. 290, பருத்தித்துறை வீதி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
தொலைபேசி : 021 205 4224

## பொருளடக்கம்

எண்ணக் கிண்ணம் - கவிதை - 02
உன்னை நம்பு - 03
வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் - ஞானா - 04
வலைவெளி ஓட்டிசம் (Autism) - பாலபாரதி - 06
செய்திச் சாளரம் - 09
தசரசம் - 10
எழுதுங்கள்; வெல்லுங்கள் - 24
முற்றத்து மல்லிகை - 25
வலுவிடம் கேளுங்கள் - 27
மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துமா? நவீன தொழில்நுட்ப மாற்றங்கள்! - 28
சிறுகதை - 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எண்ணக் கிண்ணம்

## உலகம்

உன்னைப் பார்த்து உலகம்
குரைக்கும்
தன்னம்பிக்கை தளரவிடாதே !
இரட்டைப் பேச்சு பேசும்
உலகம்
மிரட்டும் தம்பி மிரண்டுவிடாதே !
ஒவ்வொரு வாயிலும்
ஒற்றை நாக்கு
உலகின் வாயில் இரட்டை நாக்கு !
எனக்கு நேர்ந்த இழிமொழி எல்லாம்
உனக்கு சொல்கிறேன்
உள்ளத்தில் எழுது !
இன்னிசைத் தமிழை எளிமை செய்தேன்
இலக்கியம் இல்லை
லேகியம் என்றது !
திரைப்பாட்டுக்குள் செழுந்தமிழ் செய்தேன்
பரிமேலழகரை
வரச்சொல் என்றது !
குறுந்தொகை கம்பன் கொட்டி முழக்கினேன்
குண்டுச் சட்டியில்
குதிரை என்றது !
எலியட், நெருடா எல்லாம் சொன்னேன்
திறமை எல்லாம்
திருடியதென்றது !
எளிய தோற்றமே இயல்பென இருந்தேன்
வடுக பட்டி
வழியுது என்றது !
அழகாய் நானும் ஆடைகள் கொண்டேன்
கழுதைக் கெதற்கு
கண்மை என்றது !
மேடையில் கால்மேல் காலிட்டமர்ந்தேன்
படித்த திமிர்தான்
பணிவில்லை என்றது !
மூத்தோர் வந்ததும் முதலில் எழுந்தேன்
கவிஞன் அல்ல
காக்கா என்றது !
உயர்ந்தோர் பெருமை உவந்து புகழ்ந்தேன்
காதில் பூ வைக்கிறான்
கவனம் என்றது !
விரல்நகத்தளவு விமர்சனம் செய்தேன்
அரிவாள் எடுக்கிறான்
ஆபத்து என்றது !
மற்றவர் சூழ்ச்சியால் மண்ணில் விழுந்தேன்
புத்தி கொழுத்தவன்
புதைந்தான் என்றது !
மூச்சுப் பிடித்து முட்டி முளைத்தேன்
தந்திரக்காரன்
தள்ளிநில் என்றது !
பகையைக் கண்டு பைய நகர்ந்தேன்
பயந்துவிட்டான்
பாவம் என்றது !
மோதி மிதித்து முகத்தில் உமிழ்ந்தேன்
விளங்கிவிட்டதா ?
மிருகம் என்றது !
பணத்தில் பொருளில் பற்றற்று இருந்தேன்
வறுமையின் விந்துவில்
பிறந்தவன் என்றது !
என்னை தேய்த்து மண்டபம் கட்டினேன்
புலவன் இல்லை
பூர்ஷ்வா என்றது !
சொந்த ஊரிலே துளிநிலம் இல்லை
இவனா ?
மண்ணின் மைந்தன் என்றது !
தென்னை மரங்கள் தேடி வாங்கினேன்
பண்ணையார் ஆனான்
பாமரன் என்றது !
கயவர் கேட்டார் காசு மறுத்தேன்
கறக்க முடியா
கஞ்சன் என்றது !
உண்மை இருந்தால் உறுபொருள் கொடுத்தேன்
உதறித்திரியும்
ஊதாரி என்றது !
மங்கையரிடையே மௌனம் காத்தேன்
கவிஞன் என்ற
கர்வம் என்றது !
பெண்கள் சிலருடன் பேசத்தொடங்கினேன்
கண்களை கவனி
காமம் என்றது !
திசைகள்தோறும் தேதி கொடுத்தேன்
ஐயோ புகழுக்கு
அலைகிறான் என்றது !
நேரக்குறைவு நிறுத்திக்கொண்டேன்
கணக்குப் பார்க்கிறான்
கவிஞன் என்றது !
அப்படி இருந்தால் அதுவும் தப்பு,
இப்படி இருந்தால்
இதுவும் தப்பு.
கத்தும் நாய்க்கு காரணம் வேண்டாம்
தன் நிழல் பார்த்து
தானே குரைக்கும்.
உலகின் வாயைத் தைத்திடு அல்லது
இரண்டு செவிகளை
இறுக்கி மூடிடு !
உலகின் வாயைத் தைப்பது கடினம்
உந்தன் செவிகளை
மூடுதல் சுலபம்.....

● கவிஞர் வைரமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை நம்பு

பறவை ஒன்று மரக்கிளையில் வந்து அமர்கின்றது. அது அந்தக் கிளையை நம்பி அமரவில்லை. தன் இறகை நம்பியே அமர்கின்றது. திடீரென கிளை முறிந்து வீழ்கின்றது. ஆனால் பறவை விழவில்லை. எழுந்து பறக்கின்றது.

இது போல நாம் ஒவ்வொருவரும் நம்மை நம்பி வாழ்வோமானால் வாழ்க்கையில் வீழ்ச்சிகளை விட எழுச்சிகளே அதிகமாகும். வாழ்க்கைப் பயணத்தில் நமக்கான இலக்கை நாமே தேர்ந்தெடுத்து பயணிப்போமானால் அது நிச்சயமாக வெற்றியினையே பெற்றுத் தரும். பிறர் தேர்ந்தெடுக்கும் நமக்கான இலக்குகளை நோக்கி பயணிப்போமானால் அந்தப் பயணம் மிகவும் கடினமானதாகவே அமையும். தன்னம்பிக்கை உடைய ஒருவனது வாழ்க்கை ஒருபோதும் தோற்றதாக வரலாறுகள் இல்லை.

பள்ளியிலிருந்து நீக்கப்பட்ட தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழைக் கண்டு பிடித்து இந்த உலகையே ஒளிரச் செய்தார். கறுப்பினத்தவராக இருந்த ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் ஜனாதிபதி ஆனார். இது போல இரு கைகளை இழந்த போதிலும் கால்களால் விமானத்தை ஓட்டி விமான உரிமத்தைப் பெற்ற ஜெசிக்கா ஹொக்ஸ். செயற்கைக் கால்களோடு எவரசின் உச்சியைத் தொட்ட அருணிமா சிங்ஹா. கண்பார்வையை முற்றாக இழந்த போதிலும் இங்கிலாந்தில் இராஜாங்க அமைச்சரான பிரபு டேவிற் பிளங்கற். செவிப்புலனை முற்றாக இழந்த நிலையில் உலகப் புகழ் பெற்ற இசைத் தொகுப்பை (9ம் ஒத்தினி இசை) வாசித்த லூடுவிக் வான் பேத்தேவன் போன்ற பல மனிதர்கள் தம்மீது முழுமையான நம்பிக்கை வைத்து பயணித்ததால் இன்று உலக வரலாற்றுப் புத்தகங்களில் பதிவாகியுள்ளனர்.

போராட்டங்களும் துன்பங்களும் நிறைந்ததுதான் வாழ்வு. ஆனாலும் அவ்வப்போது மலர்களைத் தேடி வரும் வண்ணத்துப்பூச்சிகள் போல இன்பங்களும் சந்தோசங்களும் வரத்தான் செய்யும். வாழ்க்கையில் தோல்வியுற்றவர்கள் நடந்து வந்த பாதையில் கற்றுக் கொண்ட பாடங்களைப் புதிய அத்தியாயங்கள் ஆக்க வேண்டும் நாம் தன்னம்பிக்கையோடு பயணிக்கும்பொழுது தோல்விகள் விலகி வெற்றியின் விடியல் வரவேற்கும்.

இந்த உலகத்திற்கு இறைவன் ஒவ்வொரு மனிதனை அனுப்பும் போதும் அவனுக்குள் ஏதோ ஒரு திறமையினை வைத்துத்தான் அனுப்புகின்றான். தமக்குள் இருக்கும் அத்திறமையினைத் தமக்குள்ளே தேடிக்கண்டு கொண்டவர்கள் வெற்றி கொள்கிறார்கள். வெளியில் தேடுபவர்கள் தோற்றுப் போகின்றார்கள். இவ்வாறு அந்த இறைவன் தந்த திறமையினைக்கண்டு வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களை விட வாழ்நாள் முழுதும் தேடித் தோற்றுப் போனவர்களே அதிகம். ஆகவே தன்னம்பிக்கையோடு உன்னால் எது முடியுமே அந்தத் துறையில் உன்முழு முயற்சியினையும் செலுத்திப் போராடினால் அது நிச்சயம் வெற்றியினைப் பெற்றுத் தரும். அந்த வெற்றியுடன் நிறைவாக வாழும் பொழுது வாழ்க்கை இன்பமாகும்.

மாற்றுத்திறனாளிகள் தங்களால் முடியாது என்ற மனநிலையிலிருந்து வெளிவந்து தன்னம்பிக்கையோடு என்னால் முடியுமென வாழ்க்கையில் பயணித்தால் வெற்றிகளை நிச்சயம் பெறமுடியும். மற்றவர்களோடு தங்கி வாழும் நிலையிலிருந்து வெளிவந்து அவர்களையும் தாங்கி வாழும் நிலைக்கு வரவேண்டும். பிறர் மீது கொள்ளும் நம்பிக்கையை விட உங்கள் மீது வைக்கும் நம்பிக்கையே சிறகை நம்பி வானத்தில் பறக்கும் பறவைகள் போல உங்களையும் வாழ்வில் உயரப் பறக்க வைக்கும்.

**திரு. நா. கீதா கிருஷ்ணன்**
பிரதம ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகளை உரமாக்கி
எழுந்த உலக விருட்சங்கள்

ஞானா

# சாதிப்பதற்கு மாற்றுத்திறன் தடையல்ல



உலகில் எத்தனையோ பேர் பல்வேறு வசதி வாய்ப்புக்களையும் உடல் தகுதியை யும் பெற்றிருந்தாலும் கூட ஏதோ மனக் குறையுடன் தான் வாழ்க்கையை நடத்து கின்றனர். ஆனால் கண்,காது, வாய், கை, கால் என உடல் அவயவங்கள் பாதிக்கப் பட்டிருந்தாலும் கூட அதை குறைபாடாக நினைத்து வெதும்பாமல் பல துறைகளிலும் சாதிப்பவர்கள் ஏராளம் அவர்களில் ஒருவர் தான் புதுடில்லியில் இயன்முறை மருத்துவ ராக அரசுத் துறையில் பணியாற்றி வரும் மாற்றுத்திறனாளியான எம்.செல்வம்.

போலியோ நோயால் இடது கால் செயற் பாடு இழந்தாலும் இயன்முறை மருத்துவம் பயின்று பலருக்கும் இன்றைக்கு உடல் தசைகள், நரம்புகளில் ஏற்படும் பாதிப்புக் களை சரி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள் ளார். தமிழகத்தைச் சேர்ந்த இவர் கடந்த 15 ஆண்டுகளாக இத்தொழிலில் பல ஆயிரக் கணக்கான நபர்களுக்குச் சிகிச்சை அளித் துள்ளதாகக் கூறுகின்றார். தற்போது டில்லி யில் நாடாளுமன்றத்துடன் இணைந்த கட்டடத்தில் அமைந்துள்ள இயன்முறை மருத்துவப் பிரிவில் முதுநிலை இயன்முறை மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். இவர் சர்வதேச உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை ஒட்டி "தினமணிக்கு அளித்த பேட்டி".

திருச்சி அருகேயுள்ள நாவலூர்குட்டப் பட்டு கிராமம்தான் எனது ஊர். குடும்பத்தில் நான் உட்பட ஐந்து சகோதரர்கள். 02 சகோதரிகள் உள்ளோம். என்னைத் தவிர சகோதரர்கள் அனைவரும் விவசாயிகள். 2004 இல் இயன்முறை மருத்துவத்தில் முதுகலைப் பட்டம் முடித்தேன். 2006 இல் டில்லியில் உள்ள சஃப்தர்ஜங் மருத்துவ மனையில் இயன்முறை மருத்துவராகப் பணியில் சேர்ந்தேன். 2017 மே வரை அங்கு பணியாற்றினேன். அதன் பிறகு டெபுடேக்ஷனில் நாடாளுமன்றத்தில் இயன் முறை மருத்துவப் பிரிவில் முதுநிலை பிஸியோ தெரபிஸ்டாக பணியாற்றி வருகின் றேன். எனக்கு கீழ் 03 பேர் பணியாற்று கின்றனர்.

நான்கு வயதாக இருக்கும்போது போலி யோவால் எனது இடது கால் பாதிக்கப்பட் டது. இதன் பாதிப்பை உணர்ந்தவன் என்கிற முறையில் 12 ஆம் வகுப்புக்குப் பிறகு இந்த மருத்துவமுறையைப் பயின்றேன். போலியோ கொடிய நோய்; அதிலிருந்து எளிதில் மீள முடியாது. ஆனால் உடற் பயிற்சி மூலம் மேலும் பரவாமல் தடுக்க லாம். கண், காது, தவிர பிற உடல் ஊனம் உள்ளவர்களுக்கு பிஸியோதெரபி அவசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகிறது. இந்தப் படிப்பை சவாலாகவே எடுத்துக் கொண்டேன். இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் நின்றுகொண்டே வேலை செய்ய வேண்டும் என்பதால் நான் என்னைத் தயார்ப்படுத்தும் உடற்பயிற்சிகளை மேற் கொண்டேன். அதன் புதுப்புது தொழில் நுட் பங்களைத் தெரிந்து கொண்டு அதன் மூலம் என்னிடம் வரும் நோயாளிகளுக்கும் வழக்கமான உடற்பயிற்சிகளுடன் புதிய பயிற்சிகளையும் அளித்து வருகிறேன். தற்போதைய பிரிவில் சராசரியாக தினமும் 25 நோயாளிகளைக் கையாண்டு வருகி றேன். சஃப்தர்ஜங் மருத்துவமனையில் இதன் எண்ணிக்கை 50 வரை இருந்தது. போலியோ தொழுநோய் பாதித்தவர்களுக் கும் சிகிச்சை அளித்து வருகிறேன். தொழு நோயாளிகளுக்கு எலி கடிக்கும் வாய்ப்பு உள்ளது. அதைத் தவிர்க்க விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறேன். உடல் ஊனங்களின் பாதிப்பைத் தடுப்பதில் பிஸியோதெரபி முக்கிய பங்கு வகிக்கிறது.

எம்பிக்கள், அமைச்சர்கள் சிகிச்சை பெறுவதற்காக நாடாளுமன்றத்தில் இந்தப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. கூட்டத் தொடர் இல்லாத சமயத்தில் பணியாளர்களும் சிகிச் சைக்கு வருவர். பொதுவாக எம்பிக்கள், அமைச்சர்கள் ஆகியோருக்கு உடல், மன ரீதியான அழுத்தம் அதிகளவில் உள்ளது. அதற்கு காரணம் நாளொன்றுக்கு சுமார் 250 கிலோமீட்டர் வாகனப் பயணம் செய் கின்றனர். அவர்களுக்கு தூங்கும் நேரம் அதிகபட்சம் 6 மணி நேரமாக இருக்கும். இதனால் முதுகுவலி, கழுத்துவலி, மூட்டு வலி போன்ற பாதிப்புக்களுக்கு உள்ளாகும் சூழல் உள்ளது.

இந்தியாவில் 2.50 லட்சம் பிஸியோ தெரபிஸ்டுகள் உள்ளனர். அதே வேளை யில் மாற்றுத்திறனாளிகள் 2.50 கோடி பேர் உள்ளதாக மத்திய அரசின் கணக்கெடுப்புத் தெரிவிக்கிறது. ஆனால் உலக சுகாதார நிறு வனத்தின் கணிப்புப்படி இவர்கள் 10 கோடி பேர் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தியாவில் பிஸியோ தெரபிஸ்டுகளின் தேவை அதிகமாக உள்ளது. முதியோர், குழந்தைகள், மூளை வளர்ச்சி குறைபாடுடையவர்கள் ஆகியோருக்கு இந்த சிகிச்சை தேவையாக உள்ளது. இத னால் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார மையத் திலும் ஒரு பிஸியோதெரபிஸ்டை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.


சேவைத் துறையில் பணியாற்றுவோ ருக்கு உடல் பிரச்சினை, மனப் பிரச்சினை உள்ளது. இதனால் உடற்பயிற்சி தேவை. இதைக் கற்றுத் தருவதில் பிஸியோதெர பிஸ்ட்டுக்களின் தேவை முக்கியமாகும். அதன் அடிப்படையில் இந்தியாவில் 25 லட்சம் பிஸியோதெரபிஸ்ட்டுக்களின் தேவை உள்ளது. குறிப்பாக நகர்ப்புறங்க ளில்தான் பிஸியோதெரபிஸ்ட் உள்ளனர்.

உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தில் நான் என்னைப் போன்ற மாற்றுத்திறனா ளிகளுக்கு கூற விரும்புவதெல்லாம் மாற் றுத் திறனாளிகள் மனச்சோர்வு அடையக் கூடாது. ஒரு சக்தி உடலுக்கு அளிக்கப்பட் டுள்ளது. அதைக் கண்டுபிடித்து மக்களுக்கு பயன்படுத்த வேண்டும்.

இந்திய மத்திய அரசில் மாற்றுத் திறனாளி களுக்கு வேலைவாய்ப்பில் 4 சதவீதம் கல்வியில் 5 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. இது ஆள் தேர்வில் மட்டும் அளிக்கப்படுகிறது. ஆனால் பணி உயர்வில் அளிக்கப்படவில்லை. அதை வழங்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது. அதைச் செயல்படுத்த வேண்டும். நான் பிஸியோதெர பிஸ்ட் அமைப்பில் துணைத் தலைவராகவும் அகில இந்திய பிஸியோதெரபிஸ்ட் கூட்டமைப்பின் நிறுவனர்களில் ஒருவராகவும் உள்ளேன். இதன் மூலம் மத்திய அரசில் பிஸியோ தெரபிஸ்டுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று கோரியுள் ளோம் என்றார் எம்.செல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வ
லை
வெ
ளி

பாலபாரதி





# ஓட்டிசம்

(கடந்த இதழின் தொடர்ச்சி)

## ஓட்டிசம் என்னும் பளிங்கு அறை

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று மணிமேகலை. அதில் ஒரு காட்சி.. மணிமேகலையை அடையும் எண்ணத்துடன் சோழ இளவரசன் துரத்தி வருகிறான். அவனிடமிருந்து தப்ப பூஞ்சோலையில் இருந்த ஒரு பளிங்கு மண்டபத்தில் ஒளிந்துகொள்கிறாள் மணிமேகலை. அந்தப் பளிங்கு அறை தனக்குள்ளே இருப்பவர்களை மறைத்து. அவர்களை வெவ்வேறுவிதமான ஓவியங்களாக வெளியே காட்டுமாம். அந்த ஓவியங்களைப் பார்த்து மனம் மாறி இளவரசன் பூஞ்சோலையைவிட்டு வெளியேறுகிறான் என்று செல்கிறது அந்தக் காட்சி.

இதில் வரும் பளிங்கு அறை எனும் படிமம் ஆழமானது. உள்ளே இருப்பவர்கள் வெளியே இருப்பவர்களைப் பார்க்க முடியும். ஆனால், தொடர்புகொள்ள முடியாது. வெளியே இருப்பவர்களோ உள்ளிருப்போரின் உண்மைத் தோற்றத்தைப் பார்க்க முடியாது. அவர்களின் மாறுபட்ட ஓவியங்களையே பார்க்க முடியும். ஓட்டிசத்துக்குப் பொருத்தமானதாக இந்த உவமை இருக்கிறது.

**ஓட்டிசம் ஒரு நிலை.**

ஆம். ஓட்டிசம் என்பதும் ஒரு பளிங்கு அறையே! அதற்குள் நிற்கும் மனிதர்களால் வெளி உலகத்தோடு சரியானபடி தொடர்புகொள்ளவோ. தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தவோ முடிவதில்லை. ஆனால், வெளியிலிருக்கும் நாமோ அந்த பளிங்கு அறை காட்டும் ஓவியங்கள் போன்ற அவர்களது வேறுபட்ட நடத்தைகளைக் கொண்டு அவர்களை எடை போடுகிறோம். இன்னும் சொல்லப் போனால், அவர்களைத் தவறாகவே எண்ணுகிறோம். நாம் பார்ப்பது உண்மையல்ல என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உணராமலே அவர்களை நோக்கி சொல் அம்புகளை வீசுகிறோம்.

ஓட்டிசம் ஸ்பெக்ட்ரம் குறைபாடு என்பதைத்தான் சுருக்கமாக ஓட்டிசம் என்று அழைக்கிறார்கள். இந்தக் குறைபாட்டில் ஐந்துக்கும் மேற்பட்ட உட்பிரிவுகள் உள்ளன. இது ஒரு நரம்பியல் குறைபாடு என்கிறார்கள். ஆனாலும் இந்தக் குறைபாடு எதனால் ஏற்படுகிறது என்பதை இன்னும் கண்டுபிடிக்கமுடியவில்லை. அதன்காரணமாக இதனை வராமல் தடுக்கவோ, சரிசெய்யவோ மருந்தும் கண்டுபிடிக்கப்பட வில்லை.

ஓட்டிசம் நோய் அல்ல, குறைபாடுதான் என்று சொல்கிறார்கள். இன்னும் எளிமையாகச் சொல்வதானால் ஓட்டிசம் என்பது ஒரு நிலை என்கிறார்கள். அதோடு ஓட்டிசத்தின் நிலைக்குள் வரும் குழந்தைகள் எல்லோருக்கும் முற்றிலும் அதிலிருந்து வெளிவரு வதற்கான வாய்ப்புகள் இன்று வரை ஏதுமில்லை. சில விதிவிலக்குகள் இருக்கலாம்.

ஓட்டிச நிலைக்குள் இவர்கள் இருந்தாலும், சுயமாகச் சிந்திக்கவும், பிறரின் உணர்வுகளை உணர்ந்து கொள்ளவும் முடியும் என்பதை நம்மில் பலரும் புரிந்துகொள்ளாமல் இருக்கிறோம்.

**கட்டாயம் ஒன்றுமில்லை**

கிருஸ்ண நாராயணன் எனும் ஓட்டிச நிலையாளர் நான்கு நூல்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். தனது ஒவ்வொரு செய்கைக்குப் பின் இருக்கும் காரணங்களை அவரது முதல் நூலான, Wasted Talent என்ற புத்தகத்தில் தெளிவாக எழுதியுள்ளார். தத்துவம், உளவியல், அறிவியல் என அவரது வாசிப்பும் பரந்துபட்டு இருப்பதை நாம் அதில் அறியலாம்.

ஐஸ்வர்யா ஸ்ரீராம், 30 வயதைக் கடந்துவிட்ட ஓட்டிச நிலையாளர். 'பஸில் க்யீன்' என்று இவரை உலகுக்குத் தெரியும். பஸில் எனப்படும் புதிர் அட்டைகளை ஒன்று சேர்ப்பதில் இவரது திறமை அபாரம். பலரும் திணறும் 1,000 துண்டுகளுடைய பஸில்ஸ்களையும் நேர்த்தியாகச் சேர்த்துவிடும் வல்லமை மிக்கவர்.

கடந்த வாரம் இவரது டைரிக் குறிப்புகள் நூலாக வெளியானது. அதில் தனது அன்றாட நிகழ்வுகளைச் சங்கேத மொழியில் எழுதுவதுபோலச் சுருக்கமாக எழுதி வைத்திருக்கிறார். பொதுவாகவே ஓட்டிச நிலையாளர்களுக்கு உணர்வுகளை வெளிக்காட்டத் தெரியாது என்பார்கள். ஆனால், ஐஸ்வர்யாவின் டைரிக் குறிப்புகள் நூலைப் படித்தால் அந்த எண்ணம் உடைந்துபோகும். தனது துக்கம், மகிழ்ச்சி, கோபம் போன்ற உணர்வுகளை அழகாக அவர் குறிப்பிடுகிறார்.

அரவிந்த், பேச இயலாத இளைஞர். ஆனால் அற்புதமான கவிதைகளை ஆங்கிலத்தில் எழுதுவார். அவரது கவிதைகளில் பெற்றோர் மீதான அன்பையும், உலகம் குறித்த தத்துவப் பார்வையையும் பார்க்கலாம்.

முகுந்துக்கு 15 வயதிருக்கும். 12-வது வயதிலேயே ஒரு இசை ஆல்பத்தை வெளியிட்டு அசத்திய ஓட்டிச நிலையாளர். அதுபோல, தொலைக்காட்சியில் இசை நிகழ்ச்சியைப் பார்ப்பவர்களுக்கு சுகேஷ் குட்டனையும், செந்தில் நாதனையும் நன்றாக நினைவிருக்கும். பல பாடல்களைப் பாடி இணைய வெளியில் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசிகர் கூட்டத்தைக் கொண்டிருக்கும் இவர்கள் இருவரும் ஓட்டிச நிலையாளர்கள் தான்.

திறமைகளைத் தன்னுள்ளே வைத்துக்கொண்டு, அதை வெளிப்படுத்தத் தெரியாமல் இருக்கும் ஓட்டிச நிலையாளர்களை இந்த உலகம் அணுகும்முறை பெரும் துயரம். இப்படிப் பல ஓட்டிச நிலையாளர்கள் அதீத திறமைசாலிகளாக இருப்பதென்னவோ நிஜம்தான். ஆனால், அதே நேரத்தில் அனைத்து ஓட்டிச நிலையாளர்களும் இப்படி ஏதேனும் ஒரு துறையில் வல்லுநர்களாக இருந்தாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

**அதிகரிக்கும் ஓட்டிசம்**

பொது இடங்களுக்கு வரும் ஓட்டிச நிலையாளர்களில் சிலருக்கு அந்த இடம் புதிதாக இருந்தால், ஒருவிதப் பதற்றம் ஏற்படும். இதன் காரணமாக, விநோதமாக ஓசை எழுப்புவது, கைகளைப் பலமாகத் தட்டுவது, குதிப்பது போன்று இவர்களின் நடத்தைகளில் சில மாறுதல்கள் ஏற்படலாம். கொஞ்ச நேரத்தில் அந்தப் புதிய இடம் பழகியதும் இயல்பு நிலைக்கு வந்து விடுவார்கள்.

அமெரிக்காவில் பள்ளி செல்லும் 12 வயதுடைய ஈஸ்னா சுப்ரமணியன் என்ற சிறுமி, தனது நண்பர்களுடன் சேர்ந்து, ஓட்டிச நிலைக் குழந்தைகளுக்கு உதவும் ஒரு மொபைல் ஆப்ஸை சமீபத்தில் வடிவமைத்துள்ளார். சிறந்த கண்டுபிடிப்பு. இந்த ஆப்ஸை மேம்படுத்துவதற்கு இந்திய மதிப்பில் ரூ. 13 லட்சம் பரிசு கிடைத்திருக்கிறது. ஈஸ்னாவின் இளைய சகோதரி ஓட்டிச நிலையாளர்.

அமெரிக்காவில் வசிக்கும் 12 வயதுடைய குழந்தைகளுக்கு ஓட்டிச நிலையாளர்களின் சங்கடங்களும், அவஸ்தைகளும் புரிகிறது. அவர்களுக்கு உதவுவதற்கு முனைகிறார்கள். நம்மூரில் பெரியவர்களுக்குக்கூட இந்தப் புரிதல் இங்கே இன்னும் வரவில்லை. வர எத்தனை ஆண்டுகள் ஆகுமோ தெரியவில்லை.

அமெரிக்காவில் இயங்கும் நோய்கள் கட்டுப்பாடு தடுப்பு மையம், உலக அளவில் 68 பேரில் ஒருவருக்கு ஓட்டிசம் ஸ்பெக்ட்ரம் குறைபாடு இருக்கலாம் என்கிறது. இதன்படி, இந்தியாவில் சுமார் 1.8 கோடிப் பேர் ஓட்டிசம் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இங்கே சரியான புள்ளிவிவரங்கள் இல்லை. இந்தக் கணக்கு தோராயமானதுதான். அதே சமயம் உலக அளவில் ஓட்டிசக் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டேதான் வருகிறது. இந்தியாவிலும், தமிழகத்திலும்கூட ஓட்டிசக் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

பெற்றோர் சம்பாத்தியத்தில் 60%க்கும் அதிகமான அளவு ஓட்டிசக் குழந்தைகளின் பயிற்சி வகுப்புகளுக்கே செலவிட வேண்டியுள்ளது. இவர்களின் மருத்துவ / பயிற்சி செலவுகளைக் குறைக்க, ஓட்டிச நிலைக் குழந்தைகளுக்குத் தேவையான பயிற்சி வகுப்புகளை எல்லா அரச மருத்துவமனைகளிலும் இலவசமாக வழங்க வேண்டும்.

தினம் தினம் வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கும் இவர்களைப் பாராட்டாமல் விட்டாலும் கூடப் பரவாயில்லை. வசைச் சொற்களின் மூலம் காயப்படுத்துவதிலிருந்து சமூகமும் உறவுகளும் வெளியே வர வேண்டும். இக்குழந்தைகளையும், இவர்தம் பெற்றோரையும் கனிவுடன் அணுக வேண்டியது சமூகத்தின் கடமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சாளரம்

# கருவியின் அலுவலக கட்டட அடிக்கல் நாட்டல் நிகழ்வு

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் நீர்வேலி, பூதரமடம பகுதியில் காணியொன்றினைச் சொந்தமாக வாங்கியிருந்தது. குறித்த இக்காணியில் கருவி நிறுவனம் அலுவலகம் மற்றும் அதன் தொழில் நிலையங்களை அமைப்பதற்காக கடந்த 2022 ஜனவரி 18 அன்று அடிக்கல் நாட்டு நிகழ்வினை நடாத்தியிருந்தது.



கருவியின் தலைவர் திரு.க.தர்மசேகரம் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கட்டடத்திற்கான அடிக்கல்லினை சமூகசேவையாளர் திரு.R.செல்வநாயகம் அவர்கள் நாட்டியிருந்தார். குறித்த இந்நிகழ்வில் கருவியின் வளவாளர்கள், நலன் விரும்பிகள், நிர்வாக சபையினர், அங்கத்தவர்கள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.





கருவி நிறுவனம் தற்பொழுது 3 வாடகை கட்டடங்களில் இருந்து தனது பணிகளை முன்னெடுத்து வருகின்றது. குறித்த இக்கட்டட வேலைகள் நிறைவுற்று சொந்த இடத்தில் கருவி செயற்படுகின்றபொழுது இன்னும் அதிகளவிலான சேவைகளினை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்க வாய்ப்பு ஏற்படும். குறித்த இக்கட்டடப் பணிகளுக்கு உதவி வழங்குகின்ற, உதவிகள் வழங்க விரும்புகின்ற அனைத்து நல்லுள்ளங்களையும் கருவி நிறுவனம் நன்றியுடனும் அன்புடனும் வரவேற்று நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தசரசம்

**01**

## 01. இலக்கியச் சுவை
(கடந்த இதழ்த் தொடர்ச்சி)


01. இலக்கியச் சுவை
02. தமிழ் கற்போம்.
03. பாலருக்கு ஒரு கதை
04. மாணாக்கருக்கு ஒரு செய்யுள்
05. இலகு வழி English
06. உலகப் புகழ் பெற்ற மனிதர்கள்
07. அதிசயிக்க வைக்கும் உண்மைகள்
08. நலம் தரும் மருத்துவம்
09. பலன் சொல்லும் யோதிடம்
10. விலங்கொன்றின் வாழ்க்கை



**தொகுப்பு :**
**நா. கீதா கிருஷ்ணன்**


### இராம இலக்குவன் உடனான அனுமன் சந்திப்பு

சுக்ரீவனைத் தேடிச் சென்ற இராம இலக்குவணர்கள் பம்பை எனும் பொய்கையை அடைகின்றனர். அந்த பம்பையின் அழகையும், நீர்வளம், நிலவளம் மற்றும் இயற்கையின் அழகிய கோலங்களையும் கண்ட இராமனுக்கு, சீதாபிராட்டியின் நினைவு வந்து வாட்டியது. அந்த பம்பையில் இறங்கி நீராடி வெளிவந்த இராமன் பின்னர் அந்தப் பொய்கைக் கரையிலுள்ள சோலையில் தங்கினான். சூரியனும் அன்றைய பொழுதுக்கு விடை கொடுத்தது. சீதையின் பிரிவு எனும் நெருப்பு இராமனைச் சுட்டது. மிக நீண்ட இரவாகத் தோன்றிய அந்தப் பொழுது மெல்ல விடிந்ததும் இராம இலக்குவணர்கள் எழுந்து சபரி சொன்ன வழியில் பயணித்து, பர்வதமலை அடிவாரத்தை அடைந்தனர். இதனை மலையில் தன் அண்ணன் வாலிக்கு அஞ்சி ஒளிந்திருக்கும் சுக்ரீவன் கண்டான். கையில் வில் ஏந்தி வருகின்ற இந்த வீரர்கள் வாலியால் ஏவப்பட்டு நம்மைக் கொல்லவரும் பகைவர்களோ என்று பயந்தான். அருகில் இருந்த தனது அமைச்சனான அனுமனிடம் "வாயு குமாரா! அதோ வருகிறார்களே, வில்லேந்திய வீரர் இருவர். அவர்களைப் பார்! வாலியின் ஏவலால் நம்மைத் தேடி வருபவர்களாகத்தான் இருக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே, ஓடிப் போய் அந்த குகைக்குள் பதுங்கிக் கொண்டான் சுக்ரீவன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் வருகையைக் கண்ட அனுமன் ஒரு மாணவ பிரம்மச்சாரி வடிவத்தோடு, இராமஇலக்குவணர்கள் வரும் பாதையில் மறைந்து நின்று அவர்களை உற்று நோக்குகிறான். புழுதி படர்ந்த தோற்றத்தோடு, நடந்த களைப்பு முகத்தில் தென்பட இதோ வருகின்ற இருவரும் தவவேடம் தரித்திருக்கிறார்கள், ஆயினும் கையில் வில் ஏந்தியவர்களாகவும் இருக் கிறார்கள். அமைதியான உயர்ந்த குணத்தோராகக் காணப்பட்டாலும், ஏதோ ஒரு காரணம் பற்றி மிகக் கோபம் அடைந்திருக்கிறார்கள், இவ்வாறு அவர்களது தோற்றத்தைக் கண்டே, அனுமன் அவர்களை எடை போட்டு விடுகிறான். இவர்கள் யார்? இவர்களை உற்று நோக்கி ஆராய்ந்ததில் ஒன்று புரிகிறது. இவர்கள் மனம் சோர்வுற்று இருக்கிறார்கள். ஏதோ காரணத்தால் மனமும், உடலும் வருந்தி, துயருற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களைக் கவனிக்குமிடத்து மானுட வடிவில் வந்திருக்கிற தேவர்களே இவர்கள் என்பது புரிகிறது. இவர்கள் உயிருக்கும் மேலாக நேசிக்கும் ஏதோவொரு பொருளைத் தொலைத்துவிட்டுத் தேடுகிறார்கள் என்பது தெளிவாகிறது. இவர்கள் அறத்தையும், நன்னடத்தையும் கொண்டவர்கள். இவர்கள் தேடி வருவது எந்தவொரு ஆதாயம் கருதியும் இல்லை. தனக்கு முழு உரிமை உள்ள ஒரு பொருளை இழந்து விட்டதால் பெருந்துயரம் உற்று அதனை மீட்பதற்காக, இரு மருங்கிலும் தேடிப் பார்த்துக் கொண்டே வருகிறார்கள். இவர்கள் வீரர்க்குள்ள கோபத் தன்மை உடையவர்கள் இல்லை. கருணையில் கடல் போன்றவர்கள். நன்மை செய்வது தவிர வேறு ஒரு



செயல் அறியாதவர்கள். இவர்களைக் கண்ட அனுமன் உருகும் உள்ளத்தவனாய் மிகவும் அன்புடையவர்களை முன்பு பிரிந்து மீண்டும் இப்போது காண்பதைப் போன்ற உணர்வினைப் பெற்றான். இவர்கள் தர்மமே மனித உருக்கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று அனுமன் நினைக்கிறான். இவர்களைக் கண்டதும் என் எலும்புகள் ஏன் உருகுகின்றன? மனதில் ஏன் அன்பு இப்படி மேலிடுகிறது? எதனால் இப்படியெல்லாம் நடக்கிறது என்று மனத்தில் எண்ணிக் கொண்டிருந்த அனுமன் இருந்த இடத்தை இராமனும் இலக்குவனும் வந்து சேர்கிறார்கள்.

இராம இலக்குமணனைக் கண்ட அனுமன் அவர்களின் பாதங்களை வணங்கி, தங்கள் வரவு துன்பம் இல்லாத வரவாக இருக்கட்டும்! என வரவேற்றான். தன் எதிரே வந்து நின்று மிகவும் பணிவாக இன்சொல் பேசித் தன்னை வரவேற்கும் அனுமானை இராமபிரான் "நீ எங்கிருந்து வருகிறாய்? நீ யார்?" என்று கேட்கிறார். அதற்கு அனுமன் கூறுகிறான். "ஐயனே நான் வாயு குமாரன். அஞ்சனா தேவியின் மகனாகப் பிறந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பெயர் அனுமன் என்பதாகும்" என் றான். "இந்த பர்வதத்தின்கண் மறைந்து வாழுகின்ற சுக்ரீவனிற்கு பணிபுரிந்து வாழ்பவன். தங்களின் வரவைக் கண்டு எம் மன்னன் சுக்ரீவன் மிகவும் கலக்கம் அடைந்திருக்கிறான். நீங்கள் யாவர் என அறிந்து வரும்படி எனக்குக் கட்டளை யிட்டான். ஆதலால் நான் இங்கு வந்தேன்" என்று பணிவாகச் சொன்னான். இப்படிப் பணிவாகவும், பண்போடும், அடக்கமாக வும் பேசுகின்ற அனுமனைப் பார்த்த



இராமன்: அனுமனின் தோற்றம், பண்பு, பேசும் முறை இவற்றால் கவரப்பட்ட இராமன்;கல்வி, கேள்வி, ஞானம் இவற்றில் இவனுக்கு இணையானவர் உலகில் எவரும் இல்லை என்று மனதில் எண்ணிக் கொண்டு, தன் தம்பி இலக்குவனை அழைத்துச் சொல்லுகிறான், "தம்பி! இவன் வேதக் கடல். இவன் ஆராய்ந்து தேர்ந் தெடுத்துப் பேசும் சிற்சில சொற்களிலேயே இவன் மேன்மை வெளிப்படுகிறதே. யாரப்பா இந்த "சொல்லின் செல்வன்? லக்ஷ்மணா! இவன் ஒரு பிரம்மச்சாரி வடிவத்தில் மாணாஸ்கனாகத் தோன்றுகி றான் அல்லவா? இது இவனது உண்மைத் தோற்றம் இல்லை. இவன் இந்த உலகுக்கே ஓர் அச்சாணி போன்றவன். இவன் பெருமைகளை எல்லாம் நான் உணர்ந்து கொண்டேன். நீயும் அவைகளைப் புரிந்து கொள்வாய்" என்றான் இராமன். பிறகு இராமன், அனுமனை நோக்கி "நீ சொன்ன கவிக்குலத்து அரசன் சுக்ரீவன் எந்த இடத்தில் இருக்கிறான். அவனைப் பார்ப்ப தற்காகத்தான், நாங்கள் வந்திருக்கிறோம். அவன் இருக்குமிடத்திற்கு எங்களை அழைத்துச் செல்!" என்றான். அதற்கு அனுமன் "உயர்ந்த தோள்வீரா! உமக்கு நிகரான புனிதர் யாரே இவ்வுலகில் உளர்! எம் அரசன் சுக்ரீவனைக் காண விரும்புகிறீர்கள் என்றால், அது அவனது தவப் பயனன்றோ! வீரர்களே! சூரியனு டைய குமாரனான சுக்ரீவனை இந்திரனின் குமாரனான வாலி பகைகொண்டு துன் புறுத்தி துரத்தி விட்டான். சுக்ரீவன் உயி ருக்கு பயந்து கொண்டு இந்த ருசியமுகப் பர்வதத்தில் எங்களோடு ஒளிந்து வாழ் கிறான். அவனுக்கு பெருஞ்செல்வம் கிடைத்தது போலத் தாங்கள் அவனிடம் வந்திருக்கிறீர்கள். உலகத்தில் செய்கின்ற அறங்கள் யாவினும் துயரத்தால் அஞ்சி நடுக்கமுற்றவர்களுக்கு அபயம் அளித்துக் காப்பாற்றுவது போன்ற சிறந்த அறம் வேறு ஏதும் உளதோ?. மும்மை உலகங்களை யும் படைத்துக் காக்கும் முதல்வராகிய தாங்கள்தான், எங்களை உய்விக்க வந்த தலைவராவீர்! உங்களை சரண் என்று நாங்கள் அடைந்தோம். உங்கள் அருளன்றி வேறு எதுவும் எங்களுக்கு நன்மை பயக்கக்கூடியது இல்லை. ஐயா! என் அரசன் சுக்ரீவனிடம் சென்று வந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கும் நீவீர் யாவர்?என்று சொல்லுவதற்கு உத்தரவு இடுங்கள்" என அனுமான் இராமனை பணிந்து கேட்கின்றான்.

அதற்கு இளைய வீரன் இலக்குவன் சூரிய குலத்தில் தோன்றி மிகப் பெருமை யோடு இந்த உலகத்தை ஆண்டு வந்த பெருமையுடையவனும், தேவர்களின் பொருட்டு சம்பாசுரன் எனும் அசுரனோடு போரிட்டு போரில் அவனைக் கொன்ற புகழையுடையவனும், சத்திரியர்களுக்கே உரிய பற்பல யாகங்களைச் செய்து முடித்த வனும், கார்மேகம் போல உயிர்களின்பால் கருணையுள்ளவனுமான அயோத்தி மன்னன் தசரதச் சக்கரவர்த்தியின் கட்டளையின்படி, தசரத குமாரனாகிய இந்த ஆண்தகை இராமன் தனக்கு உரிமை யுள்ள ராஜ்ஜியத்தைத் தன் தம்பியான பரதனுக்கு பெருந்தன்மையோடு கொடுத்து விட்டு கானகம் வந்துள்ளான். இந்த வில்வீர னான இராமனுக்கு ஏவல் செய்யும் அடியவன் நான்" என்று தங்களை அறி முகம் செய்துகொள்கிறான் இலக்குவன். இந்த வரலாறுகளைக் கேட்டுக் கொண்டி ருந்த அனுமன், மனம் மகிழ்ந்து, கண்க ளில் நீர் சோர, அன்பின் மிகுதியால் அவர்கள் காலில் விழுந்து வணங்குகிறான். இப்படி ஒரு மாணவ பிரம்மச்சாரி வடிவம் தாங்கிய அனுமன் தன் பாதங்களில் விழுந்து பணிந்ததைக் கண்ட. இராம பிரான் தம்பி "இலக்குவனை அழைத்து, "தம்பி! இந்த அனுமன் சாதாரணமானவன் அல்ல பிரளய காலத்திலும் அழிவுறாத வேதங்களும், பிரபோத ஞான நிலையுமே இப்படியொரு குரங்கு வடிவம் எடுத்து நம்முன் வந்து நிற்கிறது. "தம்பி! இவன் வரவால் நமக்கு நல்ல நிமித்தம் உண்டா யிற்று. இனி நமக்குத் துன்பங்கள் இல்லை, இன்பமே நிலைபெற்றிருக்கும். இப்பேற்பட்ட அனுமன் சுக்ரீவனிடம் ஏவல் செய்பவன் என்றால், அந்த சுக்ரீவனது பெருமை எப்படி இருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ?" அப்போது தனக்கு எதிரே மனமகிழ்வோடு நிற்கும் இராமபிரானிடம் அனுமன் "நான் விரைந்து சென்று சுக்ரீவனை அழைத்து வருகிறேன். சற்று இங்கே காத்திருங்கள்" என்று சொல்லிவிட்டு, அவன் இருக்குமிடம் நோக்கி விரைந்து சென்றான்.

இராமனிடம் விடைபெற்றுக் கொண்டு சுக்ரீவனிடம் செய்தி சொல்லுவதற்காக விரைந்த அனுமன், சுக்ரீவன் இருக்குமிடம் சென்று "அடியேனும், வானர குலமும், இந்த உலகமும் ஈடேறினோம்" என்று சொல்லிக் கொண்டே, அவன் முன் போய் நின்றான். "வாலியின் உயிரைப் போக்கிட ஒரு காலன் வந்து விட்டான். நாமெல்லாம் துன்பம் எனும் கடலைத் தாண்டிவிட்டோம்" என்றான். பிறகு வந்திருக்கும் இராம, இலக்குவர் பற்றிய முழு விவரங்களையும் சுக்ரீவனிற்கு உரைத்தான். அவர்களது குலச் சிறப்பு, உள்ளழகு, புறவழகு, இவற்றை விளக்கிச் சொல்லி அவர்களால் சுக்ரீவன் அடையப் போகும் நன்மைகளை யும் எடுத்துக் கூறினான். இராமன் தாடகையை வதம் செய்ததையும், அவனது கால் துகள் பட்டு அகலிகை சாபம் நீங்கி உயிர்பெற்று எழுந்ததையும் எடுத்துரைத் தான். மிதிலைக்குச் சென்று சிவபிரானின் திரியம்பகம் எனும் வில்லை ஒடித்ததையும், மிதிலைச் செல்வி ஜனக குமாரி ஜானகி யைத் திருமணம் செய்து கொண்டதையும் எடுத்துரைத்தான். தாய் கைகேயி வரம் கேட்க, தந்தை அதனைக் கொடுக்க, அதன்படி தனக்கு உரிமையான ராஜ்ஜியத் தைத் தன் தம்பியிடம் கொடுத்துவிட்டு, கானகம் வந்த செய்தியையும் எடுத்துச் சொன்னான். பரசுராமனை கர்வ பங்கம் செய்ததையும், விராடன் எனும் அரக்கனை வீழ்த்தியதையும் விவரமாகச் சொன்னான். காட்டில் கரன் முதலான பதினான்காயிரம் அரக்கர்களைக் கொன்றதையும் எடுத்துச் சொன்னான். "மாய மானாக வேடமிட்டு வந்த அரக்கன் மாரீசனைக் கொன்றதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் எடுத்துச் சொன்னான். இப்படிப்பட்ட இராமபிரானை நீ வந்து பார்த்து, நட்பு செய்து கொள்வாயாக!" "ஐயா! அறிவற்ற அரக்கர் கோன் இராவணன், மாயையால் இராமபிரானின் மனைவி சீதாதேவியைக் கவர்ந்து சென்று விட்டான். அவனைத் தேடிவருகையில் நீ செய்த தவப்பயனாலும், தூய்மையானவன் என்பதாலும் உன்னோடு நட்பு கொள்ளும் பொருட்டு இங்கே வந்துள்ளார்". மரபுப்படி அரசனுக்கு மந்திராலோசனை சொல்லும் திறமையுள்ள அனுமன் சுக்ரீவனை நோக்கி, "அறிவார்ந்த மன்னா! உன் மீது அருள் கொண்டு இராமன் இங்கு வந்துள்ளான். இந்திர குமாரன் வாலிக்கு இறுதிக்காலம் இவர்களால் வந்துற்றது. எனவே வா! வந்து இவர்களோடு நட்பு செய்து கொள்!" என்றான்.

(தொடரும்)

**02**

## தமிழ் கற்போம்

## எழுத்தியல்

தமிழ் கற்போம் எனும் இப் பகுதியில் இம்முறை தமிழ் எழுத்துக்கள் பற்றி கற்போம்.

01. எழுத்து என்பது ஒலியின் வரி வடிவமாகும்.

02. தமிழில் மொத்தம் 247 எழுத்துக்கள் உள்ளன. இவற்றை உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், உயிர் மெய் எழுத்துக்கள், ஆய்த எழுத்து என நான்காக வகைப்படுத்து கின்றனர்.

i. உயிர் எழுத்துக்கள் -12 அ,ஆ,இ.....ஔ.

ii. மெய் எழுத்துக்கள்-18 க்,ங்,.....ன்

iii. உயிர் மெய் எழுத்துக்கள்-216 க,கா,...ங,ஙா...னௌ

மெய் எழுத்துக்களுடன் உயிர் எழுத்துக்கள் சேரும் பொழுது உயிர் மெய் எழுத்துக்கள் உருவாகின்றன.

உதாரணம்: க்+அ=க

க்+ஆ=கா

ப்+ஊ=பூ

ம்+ஔ=மௌ

iv. ஆய்த எழுத்து: 1ஃ

**03. மாத்திரை**

- எழுத்தை உச்சரிக்க எடுக்கும் கால அளவு.
- மாத்திரை என்பது கண் இமைப்பொழுது அல்லது கை நொடிப்பொழுது.
- எழுத்துக்களை உச்சரிக்கும் பொழுது அவற்றின் மாத்திரைகளுக்கு அமைய இவை வகைப்படுத்தப்படுகின்றன.

**04. உயிர் எழுத்துக்கள் 12 ஐயும் குற்றெழுத்துக்கள், நெட்டெழுத்துக்கள் என இரு வகைப்படுத்துவர்.**

i. உயிர் குற்றெழுத்துக்கள் - 05- அ,இ,உ,எ,ஒ மாத்திரை ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. உயிர் நெட்டெழுத்துக்கள்-7 - ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ
மாத்திரை இரண்டு.

**05. ஆய்த (ஃ)எழுத்திற்கும் மெய் (18)எழுத்துக்களுக்கும் மாத்திரை அரை.**

**06. I. உயிர்மெய் குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று அரை.**

உதாரணம் : க்(அரை) +அ (1) =க (ஒன்று அரை)

க் (அரை) +இ (1) = கி (ஒன்று அரை)

இவ்வாறு மெய் எழுத்துக்களுக்கு உரித்தான ½ மாத்திரையினையும் உயிர் குற்றெழுத்துக்குரித்தான 1 மாத்திரையினையும் பெற்று உயிர்மெய் குற்றெழுத்துக்கள் 1 ½ மாத்திரையினைப் பெறுகின்றன.

ii. உயிர் மெய் நெட்றெழுத்துக்கள் மாத்திரை இரண்டுஅரை

உதாரணம்: க் (அரை)+ஆ(1) = கா(இரண்டுஅரை)

க் (அரை) + ஈ(2) = கீ (இரண்டு அரை)

உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் மெய் எழுத்துக்கு உரித்தான ½ மாத்திரையினையும் உயிர் நெட்டெழுத்துக்கு உரித்தான 2 மாத்திரையுடன் 2 ½ மாத்திரையினைப் பெறுகின்றன.

**07.** மெய் எழுத்துக்களை வல்லின எழுத்துக்கள், மெல்லின எழுத்துக்கள், இடையின எழுத்துக்கள் என 03 ஆக வகைப்படுத்துகின்றனர். வண்மையான தன்மையுடையவை வல்லினம் என்றும் மென்மையான தன்மையுடையவை மெல்லினம் என்றும் இவை இரண்டிற்கும் இடைப்பட்டவை இடையினம் என்றும் பிரிக்கப்பட்டுள்ளன.

i. வல்லின எழுத்துக்கள்: 6 க்,ச்,ட்,த்,ப்,ற்
ii. மெல்லின எழுத்துக்கள்: 6 ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்
iii. இடையின எழுத்துக்கள்: 6 ய்,ர்,ல்,வ்,ழ்,ள்

**8. சுட்டெழுத்துக்கள்.**
சுட்டுப் பொருளை உணர்த்தப் பயன்படும் எழுத்துக்கள் சுட்டெழுத்துக்கள் ஆகும்.
அ,இ,உ

**09. வினா எழுத்துக்கள்.**
எ யா முதலும் ஆ,ஓ ஈற்றும் ஏ இருவழியும் வினாவாகுமே ஏ யா எனும் எழுத்துக்கள் முதல் எழுத்துக்களாக நின்றும் ஆ,ஓ ஆகிய எழுத்துக்கள் இறுதி எழுத்துக்களாக நின்றும் ஏ மொழிக்கு முதலிலும் இறுதியிலும் நின்றும் வினாப் பொருளை உணர்த்துவதனால் இவ் ஐந்து எழுத்துக்களும் வினா எழுத்துக்கள் ஆகின்றன.

**10.** முதல் எழுத்துக்கள் 30 உயிர் எழுத்துக்கள். 12 மெய் எழுத்துக்கள் 18மாக 30 எ.மத்துக்கள் முதல் எழுத்துக்கள் ஆகும்.

**03**

**பாலருக்கு ஒரு கதை** (முன் அட்டையில் இணைக்கப்பட்டுள்ளது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி ஔவையார்

(கடந்த இதழ் தொடர்ச்சி....)

51. சேரிடமறிந்து சேர்-நீ பழகும் நபர்கள் நல்ல குணங்கள் உடையவர்களா என நன்கு ஆராய்ந்து பின்பு அவர்களுடன் பழகு.
52. சையெனத் திரியேல்-பெரியோர் "சீ" என வெறுக்கும் படி வீணாய்த் திரியாதே.
53. சொற்சோர்வு படேல்- பிறருடன் பேசும் பொழுது மறந்தும் குற்றமுண்டாகப் பேசாதே.
54. சோம்பித் திரியேல்-முயற்சியின்றிச் சோம்பேறியாகத் திரியாதே.
55. தக்கோனெனத்திரி-பெரியோர்கள் உன்னைத் தக்கவன்(யோக்கியன்,நல்லவன்) என்று புகழும்படி நடந்துகொள்.
56. தானமது விரும்பு-யாசிப்பவர்களுக்கு தானம் செய்.
57. திருமாலுக்கு அடிமை செய்-நாராயணமூர்த்திக்கு தொண்டு செய்.
58. தீவினை யகற்று-பாவச் செயல்களைச் செய்யாமல் இரு.
59. துன்பத்திற் கிடங்கொடேல்-முயற்சி செய்யும் பொழுது வரும் உடம்பின் வருத்தத்திற்கு அஞ்சி அதனை விட்டு விடாதே.
60. தூக்கி வினைசெய்-ஒரு வேலையை முடிப்பதற்கான வழிமுறைகளை நன்கு ஆராய்ந்து அறிந்து பின்பு அச்செயலைச் செய்யத் தொடங்கவும்.
61. தெய்வ மிகழேல்-கடவுளை பழிக்காதே.
62. தேசத்தோ டொத்துவாழ்- உன் நாட்டில் வசிக்கும் மக்களுடன் பகை இல்லாமல் வாழ்.
63. தையல்சொல் கேளேல்-மனைவி சொல் கேட்டு ஆராயாமல் நடவாதே.
64. தொன்மை மறவேல்- பழமையாகிய நட்பினை மறந்துவிடாதே.
65. தோற்பன தொடரேல்-ஒரு செயலைச் செய்தால் தோல்வியில்தான் முடியும் எனத் தெரிந்தே அதை தொடங்காதே.
66. நன்மை கடைப்பிடி-நல்வினை செய்தலை எவ்வளவு இடையூறு வந்தாலும் உறுதியாகத் தொடரவும்.
67. நாடொப் பனசெய்- நாட்டில் உள்ள பலரும் ஒத்துக்கொள்ளத்தக்க நல்ல காரியங்களை செய்.
68. நிலையிற் பிரியேல்-உன்னுடைய நல்ல நிலையில் இருந்து என்றும் தாழ்ந்து விடாதே.
69. நீர்விளை யாடேல்-வெள்ளத்தில் நீந்தி விளையாடாதே.
70. நுண்மை நுகரேல்-நோயைத் தரும் சிற்றுண்டிகளை அதிகமாக உண்ணாதே.
71. நூல்பல கல்- அறிவை வளர்க்கும் பல நூல்களைப் படி.
72. நெற்பயிர் விளை- நெற்பயிரை விளையச் செய்வதை உன் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு வாழ்.
73. நேர்பட வொழுக- ஒழுக்கந் தவறாமல் நேர்வழியில் நட.
74. நைவினை நணுகேல்-பிறர் வருந்தத் தகுந்த தீ வினைகளைச் செய்யாதே.
75. நொய்ய வுரையேல்-பயன் இல்லாத அற்ப வார்த்தைகளைப் பேசாதே.
76. நோய்க்கிடங் கொடேல்-மிகுந்த உணவு, உறக்கம் முதலியவற்றால் நோய்க்கு வழிவகை செய்யாதே.
77. பழிப்பன பகரேல்-பெரியோர்களால் பழிக்கப்படும் இழிவான சொற்களான பொய்,கடுஞ்சொல் ஆகியவற்றைப் பேசாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. பாம்பொடு பழகேல்-பாம்புபோல கொடிய குணம் கொண்டவர்கள் உடன் பழகாதே.
79. பிழைபடச் சொல்லேல்-குற்றம் உண்டாகும் படி எதையும் பேசாதே.
80. பீடு பெறநில்-பெறுமையை அடையும் படியான நல்ல நிலையிலே நில்.
81. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்-உன்னையே நம்பியவர்களை காப்பாற்றி வாழ்.
82. பூமி திருத்தியுண்-விளைநிலத்தை உழுது அதில் பயிர்செய்து உண்.(அ)விவசாயத்தை வாழ்க்கைத் தொழிலாகக் கொள்.
83. பெரியாரைத் துணைக்கொள்-அறிவிலே சிறந்த பெரியோர்களை உனக்குத் துணையாகப் பேணிக்கொள்.
84. பேதைமை யகற்று-அறியாமையைப் போக்க.
85. பையலோ டிணங்கேல்-அறிவில்லாத சிறுவனோடு கூடித் திரியாதே.
86. பொருடனைப் போற்றிவாழ்-பொருள்களை(செல்வம் உட்பட)வீண் செலவு செய்யாமற் பாதுகாத்து வாழ்.
87. போர்த்தொழில் புரியேல்-யாருடனும் தேவையில்லாமல் சண்டை போடுவதை ஒரு வேலையாகச் செய்யாதே.
88. மனந்தடு மாறேல்-எதனாலும் மனக்கலக்கம் அடையாதே.
89. மாற்றானுக் கிடங்கொடேல்-பகைவன் உன்னைத் துன்புறுத்தி உன்னை வெல்வதற்கு இடம் கொடுக்காதே.
90. மிகைபடச் சொல்லேல்- சாதாரணமான விஷயத்தை மாயாஜால வார்த்தைகளால் பெரிதாகக் கூறாதே.
91. மீதூண் விரும்பேல்- மிகுதியாக உண்ணுதலை விரும்பாதே.
92. முனைமுகத்து நில்லேல்- எப்போதும் யாருடனாவது சண்டையிடுவதற்காக போர் முனையிலே நிற்காதே.
93. மூர்க்கரோ டிணங்கேல்- மூர்க்க குணம் கொண்டவர்கள் உடன் பழகாதே.
94. மெல்லினல்லாள் தோள்சேர்-பிற மாதரை விரும்பாமல் உன் மனைவியுடன் மட்டும் சேர்ந்து வாழ்.
95. மேன்மக்கள் சொற்கேள்-நல்லொழுக்கம் உடைய பெரியோர் சொல்லைக் கேட்டு நட.
96. மைவிழியார் மனையகல்- விலைமாந்தர் உடன் உறவு கொள்ளாமல் விலகி நில்.
97. மொழிவ தறமொழி-சொல்லப்படும் பொருளைச் சந்தேகம் நீங்கும் படி சொல்.
98. மோகத்தை முனி-நிலையில்லாத பொருள்களின் மேலுள்ள ஆசையை வெறுத்திடு.
99. வல்லமை பேசேல்-உன்னுடைய சாமர்தியத்தை நீயே புகழ்ந்து பேசாதே.
100. வாதுமுற் கூறேல்-பெரியோர்கள் இடத்தில் முரணபட்டு வாதிடாதே.
101. வித்தை விரும்பு- கல்வியாகிய நற்பொருளை விரும்பு.
102. வீடு பெறநில்-முக்தியைப் பெறுவதற்கான சன்மார்கத்திலே வாழ்க்கையை நடத்து.
103. உத்தமனாய் இரு-உயர்ந்த குணங்கள் கொண்டவனாக வாழு.
104. ஊருடன் கூடிவாழ்-ஊராருடன் நன்மை தீமைகளில் கலந்து வாழ்.
105. வெட்டெனப் பேசேல்-யாருடனும் கத்தி வெட்டுப் போலக் கடினமாக பேசாதே.
106. வேண்டி வினைசெயேல்- வேண்டுமென்றே தீய செயல்களைச் செய்யாதே.
107. வைகறை துயிலெழு- நாள்தோறும் சூரியன் உதிக்கும் முன்பே தூக்கத்தில் இருந்து எழுந்திரு.
108. ஒன்னாரைத் தேறேல்-பகைவர்களை நம்பாதே.
109. ஓரஞ் சொல்லேல்-எந்த வழக்கிலும் ஒருபுடைச் சார்பாகப் பேசாமல் நடுநிலையுடன் பேசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Would Mind

மரியாதைக்குரிய வேண்டுகோள்
(அதிகாரபூர்வமான)

- ஆங்கிலம் பேசும் ஒவ்வொரு மனிதனும் இதை அறிந்திருப்பது அவசியம்..
- இது ஒரு வினா வாக்கியம் போல அமையும் பணிவுடன் ஒரு விடயத்தைச் செய்ய வேண்டுகோள் அளிக்கும் போது பாவிக்கப்படுகின்றது.

அமைப்பு: Would You mind வினைச் சொல்லில் 2 ம் பகுதி (ing)

எதிர்மறை: Would you mind not வினைச் சொல்லில் 2 ம் பகுதி

Would you mind coming to my home.
நீங்கள் என்னுடைய வீட்டிற்கு வருவீர்களா?

Would you mind lending me your bicycle.
உங்களுடைய சைக்கிளை எனக்கு இரவல் தருவீரா?

Would you mind loving me.
என்னை நீங்கள் நேசிப்பீர்களா? காதலிப்பீர்களா?

Would you mind talking food.
நீங்கள் உணவைச் சாப்பிடுகிறீர்களா?

**எதிர்மறை**

Would you mind not making noise.
சத்தம் போடாதீர்கள்!

Would you mind not forgetting to me.
என்னுடன் கதைக்காதிருக்கிறீர்களா?

Would you mind not for getting me.
என்னை மறந்து போகாதிருப்பீர்களா

Would you mind not illtreating them.
அவர்களைக் கொடுமைப்படுத்தாதிருப்பீர்களா?




**இவற்றின் கருத்தை இந்தமுறையிலும் கூறலாம்.**

Would you mind lending me your bicycle.
உங்களுடைய சைக்கிளை எனக்கு இரவல் தருவதில் ஆட்சேபனை உண்டா?



# விளாடிமிர் புடின்

உக்ரேன் மீது போர் தொடுத்ததன் ஊடாக சர்வதேச அளவில் பேசப்படும் ஒருவராக விளாடிமிர் புடின் இருக்கிறார். உலக வல்லரசுகளில் ஒன்றான ரஸ்யாவின் தலைவரான விளாடிமிர் புடின் உடைய வாழ்க்கை வரலாற்றுப் பக்கங்களைப் பார்ப்போம். விளாடிமிர் புடின் 1952 அக்டோபர் 7ஆம் திகதி ரஸ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் பிறந்தார். இவரது தந்தை விளாடிமிர் ஸ்பிரிடோனோவிச். தாயார் மரியா செலோமோவா. இவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரு சகோதரர்கள். அவர்கள் இருவரும் இரண்டாம் உலகப்போர்க் கால நோய்ப் பாதிப்புகளால் சிறு வயதினிலேயே உயிரிழந்தனர். இதனால் கடைசிப் பிள்ளையான புடினை பெற்றோர்கள் மிகக் கவனமாகப் பராமரித்து வளர்த்தனர். விவசாயக் கிராமத்தில் பிறந்த இவர் கடற்படை, உளவுத்துறை, பைலட் போன்ற துறைகளில் சாதிக்க வேண்டும் என்ற இலட்சியத்தை தன்னகத்தே கொண்டிருந்தார்.

புடின் ஆரம்பக் கல்வியினை லெனின்கிராட் பள்ளியில் ஆரம்பித்தார். சிறுவயதிலே கெட்டித்தனம் மிக்க மாணவனாக விளங்கிய இவர், உயர்நிலைப் பள்ளி 281 இல் சேர்ந்து 6ஆம் வகுப்பு முதல் உயர்நிலை வரை கற்றார். லெனின்கிராட் மாநில பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற இவர் புனித பீட்டர்சுபர்கு அரசுப் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

புடின் 1975 ஆம் ஆண்டு கேஜிபியில் உளவுத்துறை அதிகாரியாக பதவியேற்றார். ஜேர்மனியில் உளவாளியாக கடமையாற்றிய காலத்தில் அதாவது 1989களில் கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனிகளைப் பிரித்துக் கட்டப்பட்டிருந்த பெர்லின் சுவர் இடிக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் உளவாளிகள் சுற்றி வளைக்கப்பட்ட போது அவர்கள் தப்பிச் செல்ல இவர் எதிரிக ளிடம் தமது உளவுக் கோப்புக்கள் சென்றடையா வண்ணம் அவற்றைத் தீயிட்டு எரித்துவிட்டு தப்பிச் சென்றார்.

1991இல் தனது அரசியல் வாழ்வினை ஆரம்பித்த புடின் 1998 இல் ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சின் நிர்வாகத்தில் இணைந்து ரஸ்ய அரசாங்கத்தின் உயர் பதவிகளை வகித்தார். 2000, 2004, 2012, 2018 ஆகிய ஆண்டுகளில் நாட்டின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1983 ஆம் ஆண்டு புடின் லுட்மிலா என்பவரை திருமணம் செய்தார். இவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகள். பல்துறை வல்லுநராக விளங்கிய புடின் செல்லப்பிராணிகள் மீதும் குறிப்பாக நாய்களின் மீதும் பிரியமுள்ளவராக விளங்கினார். அத்துடன் ஒரு குதிரை வீரராகவும் இருந்ததார். தற்காப்புக் கலைகளில் கைதேர்ந்த இவர் யூடோவை கற்றிருந்தார். ஆங்கிலத்தைப் பெரிதும் கற்றுக் கொள்ளாத இவர் ரஸ்ய மொழி, ஜேர்மனிய மொழி போற்றவற்றைச் சிறப்பாகக் கற்றுத் தேர்ந்திருந்தார்.

**07** அதிசயிக்க வைக்கும் உண்மைகள்

## ஓசோன் படலத்தை அழிவில் இருந்து பாதுகாத்தல்



நம் பூமியின் வெப்பம் பல மடங்கு அதிகரிக்கப் போவதாக நாசா எச்சரித்து உள்ளது. மனித குலத்திற்கே பாதிப்பு ஏற் படுத்தும் அளவிற்கு மிக அதிக அளவில் வெப்பம் உயர வாய்ப்புள்ளதாக அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்துள்ளது. உலகில் வெப்பநிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் மிகுந்த இடர்களுக்கு மத்தியி லேயே நாம் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர வேண்டியிருக்கும். இந்த நிலையில் எரிமலை வெடிப்புகள் காரணமாக ஓசோன் படலம் அதிக அளவில் பாதிப்பு அடைய வாய்ப்புக்கள் உள்ளதாக நாசா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக நாசா தெரிவித்ததாவது. Flood Basal Eruption எனப்படும் தொடர்ச்சியாக அடுத்தடுத்து ஏற்படும் எரிமலை வெடிப்புகள். அதாவது பூமியில் இருக்கும் எரிமலைகள் திடீரென பல வருடங்களுக்கு அடுத்தடுத்து குறிப்பிட்ட இடை வெளியில் வெடிக்கலாம். பல ஆண்டு கள் அல்லது பல நூறு ஆண்டுகள் இடை வெளியில் வெடிக்கலாம். இவ்வாறான நிகழ்வுகள் ஏற்கனவே பூமியில் நடந்திருக் கக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பல உயிரினங்கள் அழிந்து இருக்கின்றன. 15 தொடக்கம் 17 மில்லியன் ஆண்டுகள் அளவில் பசிபிக் பகுதியில் விட்டு விட்டு எரிமலை தொடர்ந்து சுமார் 2 மில்லியன் ஆண்டுகள் வரை வெடித்து உள்ளது. இவ்வாறான ஒரு நிலைமை தற்பொழுது பூமியில் எற்பட்டுள்ளதா என்ற சந்தேகம் உருவாகியுள்ளது. ஏனெனில் அவ்வப் போது ஆங்காங்கே சிறுசிறு எரிமலை வெடிப்புச் செய்திகள் வருவதை அறிகின் றோம். இதன் மூலம் ஓசோன் படலம் மிகப் பெருமளவில் பாதிப்படைய வாய்ப்புள்ளது.

எரிமலை வெடிப்புகளால் சல்பர் ஆக்சைட் வானத்திற்கு செல்லும். இது ஏரோ சால்களை உருவாக்கும். இந்த ஏரோசால் அகச் சிவப்பு ரேடியசன் கதிர்களைப் பூமியில் விடும். இதனால் வெப்ப நிலை பூமியில் அதி கரிக்கும். தண்ணீர் ஆவியாகும். இதன் காரணமாக 10 ஆயிரம் சதவிகிதம் தண் ணீர் கூடுதலாக ஆவி ஆகும். இந்த ஆவி மேலே செல்லும்போது எல்லாம் சேர்ந்து ஓசோன் படலத்தை பெரிதளவில் பாதிக்கும் என கூறப்படுகின்றது. எரிமலை வெடிப்பை நாம் தடுக்க முடியாது. பூமியின் வெப்ப நிலையைக் கட்டுப்படுத்த வேண்டும். இதன் மூலம் நீர் ஆவியாவதைக் குறைக்க முடியும். இதனால் ஓசோன் படலத்தையும் காக்க முடியும் என்று நாசா அறிவுறுத்தி உள்ளது.

08

## நலம் தரும் மருத்துவம்

### விலங்கு விசர்நோய்

- நோய்க்காரணி
  ரேபீஸ்வைரஸ் (Family Rhabdoviridar)
- நோய் அரும்பு காலம்:
  1-3 மாதங்கள் (2 வருடங்கள் வரை)
- மனிதரில் நோய் அறிகுறிகள்:
  1. காய்ச்சல்
  2. மூச்சித் திணறல், குழப்ப நிலை, கோபம், அசாதாரண நடவடிக்கைகள்.
  3. பேசுவதில் சிரமம்
  4. விழுங்குவதில் சிரமம்
  5. நீரைப் பார்த்தால் பயம்
  6. நோயறிகுறிகள் ஏற்பட்டு 2-10 நாட்களினுள் மரணம் சம்பவிக்க லாம்.
- நோய் பரவும் முறை / தொற்றும் முறை:
- பிரதான நோய்க் காவியாக நாய் உள்ளது.
- நாயில் நோய்க்கிருமி பெருக்கமடைந்து உமிழ் நீர் மூலம் வெளியேறுகிறது.
- நோய் தொற்றுள்ள நாய்க்கடியினால் 97 வீதமும் பூனை மூலம் 2 வீதமு மாக நோய்த் தொற்று ஏற்படுகின்றது.
- 20 வீதம் வளர்ப்பு நாய்களாலும், 80



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதம் கட்டாக்காலி நாய்களாலும் ஏற்படுகிறது.

- நோயைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகள்:


1. முற்கூட்டி தடுப்பு மருந்தேற்றல் (ஆபத்து நிலையில் உள்ளவர்களுக்கு)
2. நாய்க்கடியின் பின்னான தடுப்பு மருந்தேற்றல்.
3. வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந் தேற்றல்.
4. கட்டாக்காலி நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்.
5. நாய்களுக்கான இனப்பெருக்கக் கட்டுப்பாடு.
6. கட்டாக்காலி நாயழிப்பு
7. தொற்று நோயியல் கண்காணிப்பு.
8. சுகாதாரக் கல்வியூட்டல்.

- **நாயில் ஏற்படும் அறிகுறிகள்:**

1. கோபடைந்த நிலை
2. கண்ணில் தெரியும் பொருட்களைக் கடித்தல்
3. நீரைக் குடிக்க முடியாத நிலை
4. அதிகரித்த உமிழ் நீர்ச்சுரப்பு
5. அசாதாரணமாக ஊளையிடல்
6. திடீரெனக் கடித்தல்
7. சுய கட்டுப்பாடற்ற செயற்பாடுகள்
8. அசாதாரண நடவடிக்கைகள்

(நன்றி இந்த இணையத்தில் இருந்து பெறப்பட்டது World Vision Lanka)

## 09 பலன் சொல்லும் ஜோதிடம்



### 09. பலன் சொல்லும் ஜோதிடம்

இம் முறை இப்பகுதியில் கிழமைப் பலனினைப் பார்க்க இருக்கின்றோம். நீங்கள் வாரத்தில் எந்தக்கிழமை பிறந்துள்ளீர்கள் என்பதனை அறிந்து அதற்கான பலனினை இங்கு கண்டு கொள்ளலாம்.

இப் பதிவு இணைய யோதிட பலன்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.

**ஞாயிற்றுக்கிழமை:**

இது சூரியனின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட கிழமை. ஞாயிறு அன்று பிறந்தவர்கள் புகழ் மிக்கவர்களாகப் பலரால் அறியப்படுபவர்களாகவும் இருப்பர். தலைமைப் பதவிகள் இவர்களைத் தேடி வரும். வெற்றியைப் பெறும் வரை போராடுபவர்களாக இருப்பார்கள். தந்தை மகன் உறவு சிறப்பாக இருக்கும்.

அதிஸ்ட வயதுகள்:
19,28, 37, 45, 55, 64, 73
அதிஸ்ட கிழமை: வெள்ளி

**திங்கட்கிழமை:**

இது சந்திரனின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட கிழமை. திங்கள் அன்று பிறந்தவர்கள் அழகான தோற்றத்தினையும் இளகிய மனதினையும் பிறரைக் கவரும் நற்குணத்தினையும் கொண்டவர்களாக இருப்பார்கள். நேர்மையினைக் கடைப் பிடிப்பவர்களாகவும் இருப்பார்கள். தாய், மாமி, அத்தை முறை உறவுகள் சிறப்பாக இருக்கும்.

அதிஸ்ட வயது:
20, 29, 37, 47, 56, 65, 74
அதிஸ்ட கிழமை: திங்கட்கிழமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செவ்வாய்க் கிழமை:**

இது செவ்வாயின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட கிழமை. கடுமையான உழைப் பால் வாழ்க்கையில் முன்னேற்றம் அடை வர். தமக்குத் தேவையான சொத்துக்களைத் தாமாகவே தேடிக் கொள்ளக் கூடியவர்கள். தான் சொல்வதே சரி என வாதாடுபவர்கள். நியாய தர்மங்களுக்கு கட்டுப்பட்டவர்கள். இவர்களுடன் வாதாடி வெல்லது கடினம். இவர்களுக்கு சகோதரர்களின் ஆதரவு எப்போதும் இருக்கும். பெண்களுக்கு கணவரின் அன்பும் ஆதரவும் இருக்கும்.

அதிஸ்ட வயது:

27, 36, 45, 54, 63, 72

அதிஸ்ட கிழமை: வியாழன்.

**புதன் கிழமை:**

இது புதனின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட கிழமை. இயல்பாகவே அறிவாற்றலுடைய இவர்கள் உயர் பதவிகளை வகிப்பர். இவர் கள் செல்லும் இடங்களில் தமது பெருமை யினை நிலைநாட்டி விடுவார்கள். இவர்கள் ஒரு சில நல்ல நண்பர்களை மட்டுமே வைத்திருப்பர். மற்றவர்களின் மனதை அறிந்து செயற்படக்கூடியவர்களாகவும் ரகசியங்களைப் பாதுகாப்பவர்களாகவும் இருப்பர். இக்கிழமையில் பிறந்தவர்களுக்கு இளைய சகோதரர்கள், மாமன் முறை உறவு சிறப்பாக இருக்கும்.

அதிஸ்ட வயது:

23, 32, 41, 50, 59, 68

அதிஸ்ட கிழமை: வியாழன்

**வியாழக்கிழமை:**

இது குருவின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட கிழமை. புத்திசாலிகளாகவும் அறிவுரை கூறக் கூடியவர்களாகவும் உதவி புரியும் மனப்பாங்குடையவர்களாகவும் இருப்பர். அனாவசியமாக எந்தப் பிரச்சினைகளிலும் சிக்கிக் கொள்ள மாட்டார்கள். தன் வாழ்க் கையில் எவ்வாறு முன்னேறலாம் என் பதை உணர்ந்து செயற்படுவார்கள். இவர்க ளுக்கு தூரப் பிரயாணம் செய்ய வேண்டிய தேவை இருக்கும். இவர்களுக்கு குருவின் ஆசிகள் எப்போதும் இருக்கும்.

அதிஸ்ட வயது:

21, 30, 57, 66, 75, 84

அதிஸ்ட கிழமை: வெள்ளி

**வெள்ளிக்கிழமை:**

இது சுக்கிரனின் ஆதிக்கத்திற்குட்பட்ட கிழமை. கடவுள் நம்பிக்கை கொண்டவர் களாகவும் விரும்பிய பொருளை வாங்க ஆர்வம் உடையவர்களாகவும் பிடிவாதக் குணம் உடையவர்களாகவும் வசதி வாய்ப்பு மிக்கவர்களாகவும் இருப்பர். மற்றவர்களின் துணையுடன் எந்த வேலை களையும் செய்து முடித்து விடுவார்கள். கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும். இக் கிழமைகளில் பிறந்தவர்களுக்கு மகள், மருமகள், மனைவி ஆகியோரின் அன்பும் ஆதரவும் இருக்கும்.

அதிஸ்ட வயது:

22, 26, 31, 35, 44, 53, 62, 66, 71

அதிஸ்ட கிழமை: திங்கள்

**சனிக்கிழமை:**

இது சனீஸ்வரனின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட கிழமை. கடுமையாக உழைப்ப வர்களாகவும் எதைப்பற்றியும் கவலைப் படாதவர்களாகவும் பிறரோடு அளவோடு பேசிப்பழகுபவர்களாகவும் பொறுமை சாலிகளாகவும் தான் உண்டு தன் வேலை யுண்டு என நினைப்பவர்களாகவும் இருப்பர். இக்கிழமையில் பிறந்தவர்களுக்கு மூத்த சகோதரர்கள் மற்றும் பணியாளர் களின் அன்பும் ஆதரவும் இருக்கும்.

அதிஸ்ட வயது:

22, 26, 31, 35, 41, 50, 53, 58, 62, 67

அதிஸ்ட கிழமை: வியாழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குதிரை



**உயிரியல் வகைப்பாடு**

திணை: விலங்கு

தொகுதி: முதுகுநாணி

வகுப்பு: பாலூட்டி

வரிசை: ஒற்றைப்படைக் குளம்பிகள் Perissodactyla

குடும்பம்: குதிரைக் குடும்பம் Equidae

குதிரை, பாலூட்டி இனத்தைச் சேர்ந்த ஒரு தாவர உண்ணி. குதிரைகள் மிக வேகமாக ஓட வல்லவை. இவை நின்றவாறே தூங்கும் இயல்புடையவை. ஏறத்தாழ 3 மணித்தியாலங்கள் வரை இவ்வாறு தூங்கும். நள்ளிரவு வேளைகளில் படுத்துறங்கும். குதிரைகளின் உறக்க நேரம் அவற்றின் வயதிற்கேற்ப மாறுபடும். இனம் மற்றும் சூழலைப் பொறுத்து குதிரைகளின் ஆயுட் காலம் மாறுபடுகின்றது. நவீனரகக்குதிரைகள் 25 முதல் 30 ஆண்டுகள் வரையான ஆயுட்காலத்தைக் கொண்டவை. ஆனால் சில குதிரைகள் 40 ஆண்டுகளுக்கு மேலாக உயிர் வாழ்ந்ததற்கான பதிவுகளும் உள்ளன. 19ஆம் நூற்றாண்டை சேர்ந்த பழைய பெல்லி என்று அழைக்கப்பட்ட குதிரையானது சுமார் 62 வயது வரை வாழ்ந்துள்ளது என்று அறியப்பட்டுள்ளது. ஒரு குதிரையின் வயது அதன் பற்கள் மூலமாக கணக்கிடப்படுகின்றது. குதிரைகளின் கர்ப்பகாலம் 10 மாதங்கள். அதாவது, 335 முதல் 340 நாட்கள் ஆகும். குதிரைக்குட்டிகள் பிறந்த சிறிது நேரத்திலேயே எழுந்து நடக்க ஆரம்பித்து விடுகின்றன. ஐந்து ஆண்டுகளில் இனப்பெருக்கத்திற்குத் தயாராகின்றன. கறுப்பு, வெள்ளை, சாம்பல், சிகப்பு கலந்த பழுப்பு நிறம் மற்றும் இரு நிறங்கள் ஒரே குதிரையில் கலந்தும் காணப்படுகின்றன. குதிரையின் உடலில் சராசரியாக 205 எலும்புகள் உள்ளன. குதிரைகளின் பற்களைப் பொறுத்தவரை ஆண்களுக்கு 40 பற்களும் , பெண்களுக்கு 36 பற்களும் இருக்கும். குதிரைகளை சிங்கம் , புலி போன்ற விலங்குகள் வேட்டையாடி தமது உணவாக்கிக் கொள்கின்றன. இவற்றிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் கால்களும் குளம்புகளும் அமைந்துள்ளன. குதிரைகள் புற்கள் தானியங்கள் ஆகியவற்றை உணவாக உட் கொள்கின்றன.

கிறிஸ்துக்கு முற்பட்ட காலம் தொடங்கி கிறிஸ்துக்கு பிற்பட்ட இருபதாம் நூற்றாண்டு வரை குதிரை மனிதனின் போக்குவரத்துக்கும், மேற்குலக நாடுகளில் ஏர் உழுவதற்கும் உதவி புரிந்தது. பண்டைய அரசுகளின் படைகளில் குதிரைப்படை இன்றியமையாத ஒன்றாக இருந்துள்ளது. இன்றும் நாட்டுத் தலைவர்களின் வருகைகளின் பொழுதும் அரச நிகழ்வுகளின் பொழுதும் குதிரை வீரர்களின் அணி வகுப்பும் சில இடங்களில் இடம் பெறுவது வழமை. குதிரைகளைக் கொண்டு பந்தயங்களும் நடத்தப்படுகின்றன. குதிரைகளின் பயன்பாட்டிற்கு ஏற்ப அவற்றிற்கு லாடங்கள் அடிக்கப்படுகின்றன. குதிரையின் சதை, தோல், எலும்பு, முடி மற்றும் பல் போன்றவை பல்வேறு பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுங்கள் வெல்லுங்கள்.

**போட்டி இல. 33 வினாக்கள்**

- **தமிழ்**

01. உயிர் குற்றெழுத்துக்கள் எவை?
02. 25வது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா எது?
03. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி ஆகியவற்றின் ஆசிரியர் யார்?

- **பொது அறிவு**

04. சவுதி அரோபியாவின் தலைநகரம் எது?
05. இலங்கையின் தேசிய விலங்கு எது?
06. இலங்கையின் முதலாவது பிரதம நீதியரசர் யார்?

- **மாற்றுத் திறனாளிகள்**

07. கற்றல் திறன் குறைபாடு (Dyslexia) இருந்த நிலையிலும் அமெரிக்கா நாட்டின் ஜனாதிபதியாக உயர்ந்த நிலைக்குச் சென்ற முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி யார்?
08. ஐ.நாவினால் மாற்றுத்திறனாளிகளுக்கான தசாப்தமாக பிரகடனப்படுத்தப்பட்ட காலப்பகுதி யாது?
09 மாற்றுத்திறனாளி ஒருவர் எந்த ஒரு தடையுமின்றி பொதுக்கட்டடங்களைத் தாமாகவே அணுகிச் செல்வதற்கு ஏற்றால் போல் கட்டடங்களை அமைத்தல் வேண்டும் என கூறும் விதி யாது?
10. உலக செவிப்புலனற்றோர் தினம் எப்போது அனுஷ்டிக்கப் படுகிறது?

**இவ் வினாக்களுக்குரிய சரியான விடைகளை எழுதி அனுப்பி வையுங்கள்.**

*விடைகள் எமக்குக் கிடைக்க வேண்டிய இறுதிநாள் டிசெம்பர் - 31 - 2022.*

*இவ்விடைகளுடன் உங்கள் சுயவிபரத்தையும் (முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த ஆண்டு, மாதம், திகதி) இணைத்து அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதி அனுப்புபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில் வழங்கப்படும்.*

அனுப்ப வேண்டிய முகவரி:
எழுதுங்கள்: வெல்லுங்கள்
**கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம்,**
இல: 290, பருத்தித்துறை வீதி. நீர்வேலி தெற்கு. நீர்வேலி.

## போட்டி இல. 33 விடைகள்

01. ........................................
02. ........................................
03. ........................................
04. ........................................
05. ........................................
06. ........................................
07. ........................................
08. ........................................
09. ........................................
10. ........................................

## போட்டி இல:32 விடைகள்

1. ஃ
2. வில்லிபுத்தூரார்(வில்லி பாரதம்)
3. அறத்துப்பால்.பொருட்பால்.காமத்துப்பால்
4. கங்காரு எலி
5. ஏஞ்சல் நீர்வீழ்ச்சி (வெனிசுலா)
6. சஜித்பிரேமதாச
7. டிசம்பர் 03
8. மனநலிவு (டவுன் சிண்ட்ரோம்)
9. மாா்லீ மற்லீன்
10. 1989

இன்றைய கொவிட் பெருந்தொற்று இடர்காலத்திலும் வலு தொடர்ச்சியாக வெளிவருகிறது என்பதனை வாசகர்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். தொடர்ந்து வரும் காலங்களில் 'வலு' உரிய காலத்திலேயே உங்கள் கரங்களில் தவழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முற்றத்து மல்லிகை

நேர்காணல் : கணபதி சர்வானந்தா

# முயன்றால் முடியாததொன்றும் இல்லை.

## மனம் திறக்கிறார் ரேகா.



"முயன்றால் முடியாததொன்றும் இல்லை.முயற்சித்துப் பார்க்காதவரே முடியாது என்ற வார்த்தையை உபயோகிப்ப வர்கள் என்பது எனது விளக்கம். எவ்விதமான இடர்களை எதிர்நோக்கியபோதும் நான் முயற்சியைக் கைவிட்டதில்லை. வாழ்க்கையில் முயற்சி செய்தேன் ஒரு ஆசிரியராக வந்திருக்கிறேன். அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. இன்றும் முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்." - என்று சொல்கிறார் ரேகா. இவர் முழுப்பெயர் செல்வி ரேகா கிருபானந்ததேவன்.

இம் முறை வலுவின் முற்றத்து மல்லிகைப் பகுதியை அலங்கரிக்கிறார் இவர். சேவைகளில் உயர்ந்ததாகப் போற்றப்படும் ஆசிரிய சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். பன்னிரண்டு வயதாக இருக்கும்போது இவரது கண் பார்வை சற்று மங்கத் தொடங்கியது. படிப்படியாகப் பார்வை குறையத் தொடங்கினாலும் இவர் தனது கற்றல் முயற்சியைக் கைவிடவில்லை. தொடர்ந்து வாழ்வகத்தில் இணைந்து பிரெய்ல் மொழி மூலம் கற்றலை மேற்கொள்ளலா னார். யாழ்.பல்கலைக்கழக கலைப்பட்டதாரியான இவர் யாழ் கெருடாவில் இந்துத் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியராகவும் விளங்குகிறார்.

1983.08.24ஆம் திகதி யாழ்ப்பாணம் கரவெட்டியில் திரு.திருமதி. கிருபானந்ததேவன் இரத்தினேஸ்வரி தம்பதியி னருக்கு இளைய மகளாகப் பிறந்தவர்.இவருக்கு ஒரு சகோத ரரும் ஒரு சகோதரியும் இருக்கின்றனர். ஆரம்பக் கல்வியினை யாழ்.கரவெட்டி வேதாரணியஸ்வர வித்தியாலயத்தில் பயின்றார். இடைநிலை மற்றும் க.பொ.த.உயர்தரக் கல்வியினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமநாதக் கல்லூரியிலும் க.பொ.த சாதாரணதர வகுப்பினை யூனியன் கல்லூரியிலும் பயின்றார். 2007 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி 2009 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகக் கலைப் பீடத்திற்குத் தெரிவானார். 2012 ஆம் ஆண்டு கலைப்பட்டதாரியாக வெளிவந்த இவர் 2017 முதல் யாழ்.கெருடாவில் இந்துத் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

இவர் தனது பள்ளிக் காலத்தை இவ்வாறு மீள எண்ணிப் பார்க்கிறார். "இராமநாதன் கல்லூரியில் பயின்ற பொழுது சக மாணவிகள் எனக்கு மிகுந்த துணையாக இருந்தார்கள். வகுப்புகளுக்கு அழைத்து செல்ல, பாடசாலைக் குறிப்புக்களை வாசித்து ஒலிபரப்புச் செய்ய, விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு என எல்லா வகையிலும் உதவி புரிந்தனர். இல்ல மெய்வலுநர் திறனாய்வு விளையாட்டுப் போட்டியில் குண்டெறிதல், தட்டெறிதல் போன்றவற்றில் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளேன். அதற்கும் எனது சகமாணவிகளே உறுதுணையாக இருந்தனர். பல்கலைக் கழகத்தில் படிக்கும்போதும் சக மாணவிகளின் உதவி எனக்குக் கிடைத்தது.

தற்பொழுது யாழ்.கெருடாவில் தமிழ்க் கலவன் பாடசாலையில் 6 தொடக்கம் 9 வரையான வகுப்பு மாணவர்களுக்கு குடியுரிமைப் பாடத்தினைக் கற்பித்து வருகின்றேன். மறுநாள் கற்பிக்கவிருக்கும் விடயத்தினை முதல் நாளே தயார்படுத்திப் பாடக் குறிப்புகளை பிரெய்லில் எழுதி வைத்துவிடுவேன். மேலதிக பாடம் சம்மந்தமான விடயங்களை ஒலிப்பதிவு செய்து எடுத்துக் கொள்வேன். இவ்வாறு தான் மாணவர்களுக்குக் கற்பித்து வருகின்றேன். எனது பாடத்திற்கு மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொள்வது எனக்கு மகிழ்வைத் தருவதாக உள்ளது. நான் எடுக்க வேண்டிய பாட வேளைக்கு வகுப்புக்குச் செல்வதற்கு பிள்ளைகள் வந்து என்னை ஆர்வமாக அழைத்துச் செல்வது எனக்கு மன மகிழ்வைத் தருகின்றது. நான் தற்பொழுது பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியினை மேற் கொண்டு வருகின்றேன்.

"பார்வையற்றவர்களுக்கு நான் சொல்லக் கூடிய ஒரு அறிவுரை என்னவெனில், அவர்கள் தமது குறையினை எண்ணிச் சோர்ந்து விடாது விடா முயற்சியுடன் கற்றுப் பல்கலைக்கழகம் செல்ல முயற்சிக்க வேண்டும். அதனூடாக அரச தொழிலினைத் தேடிக் கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அவர்கள் தங்களுடைய வாழ்க்கை யினைச் சந்தோசமாகக் கொண்டு செல்ல முடியும். இது எனது அனுபவக் கருத்து.

சமூகத்திற்கு தாங்கள் கூற விரும்பும் செய்தி யாது? என ஆசிரியை ரேகாவிடம் கேட்டோம்.

சமூகத்தில் வலுவிழந்தவர்களுக்கு உதவி புரியும் மனப்பாங்கோடு பலர் இருப்பது நல்ல விடயம். ஆனால் சில இடங்களில் ஒரு சிலரது செயற்பாடுகள் எம்மை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கு வதாகவும் இருக்கின்றன. எனவே, குறித்த இடங்களில் பணியாற்றுவர்கள் எம் போன்றவர்களுக்கு உதவி புரியும் பொழுது இச்சமூகமானது ஆரோக்கியம் பெறும்.

நான் கல்வியில் உயரிய நிலையை அடைந்து இன்று ஒரு ஆசிரியராகப் பணியாற்றுவதற்கு எனக்குத் துணை நின்றவர் எனது தாயார். என்னோடு என் றுமே கூட இருந்து நான் சோர்வுற்ற காலங் களிலெல்லாம் ஆறுதல் கூறிய எனது தாயா ரினை என்றுமே நான் போற்றக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**உமது கற்கைத் துறை பற்றிக் கூறுங்கள்?**

நான் கர்நாடகசங்கீதம் முறைப்படி கற்றுள்ளேன். கச்சேரிகளும் நடாத்தி யுள்ளேன். மேலும் கணனி, சிங்களம், போன்றவற்றையும் கற்று வருகின்றேன்.

நான் ஆரம்பத்தில் சொன்னது போல முயற்சி திருவினையாக்கும் என்பதைப் பரிபூரணமாக நம்ப வேண்டும். எதற்கும் மற்றவர்களை நம்புவதைவிட முதலில் நாம் எம்மை நம்ப வேண்டும். எமது செயற்பாட்டில் நம்பிக்கை வைக்க வேண்டும். விழிப்புலனற்ற என்னால் படித்து ஒரு ஆசிரியையாக வர முடியு மென்றால்? ஏன் உங்களால் முடியாது. ஒரு முறை சிந்தித்துப் பாருங்கள். ●



## வலுவிடம் கேளுங்கள்

● அபிஷா முல்லைத்தீவு

❖ என்னுடன் கல்வி பயிலும் சக மாணவி ஒருவர், ஆசிரியர் கரும் பலகையில் எழுதிக் கற்பிக்கும் விடயங்களைத் தெரிந்து கொள்வ தில் இடர்ப்படுகின்றார். நான் அவரிடம் கேட்டபொழுது அவ் எழுத்துக்கள் தனக்குத் தெளி வாகத் தெரியவில்லை எனக் கூறு கின்றார். இவருக்கு எவ்வாறு உதவலாம்?

❖ நண்பிக்கு உதவி செய்ய வேண் டும் என்ற எண்ணம் கொண்ட தங் களை வலு முதலில் நன்றியுடன் பாராட்டுகின்றது. குறித்த அம் மாணவியின் இடர்ப்பாட்டினை உங்கள் வகுப்பாசிரியருக்கோ அல்லது பாட ஆசிரியருக்கோ தெரியப்படுத்துங்கள். அத்துடன், பெற்றோருக்கும் தெரியப்படுத்த முடியுமாயின் அவர்களுக்கும் தெரி யப்படுத்துங்கள். குறித்த அம் மாணவியைக் கண் மருத்துவரிடம் சென்று கண் பரிசோதனை செய்து கொள்ள அறிவுறுத்துங்கள். மருத்துவரின் ஆலோசனைப்படி தீர்வினைப் பெற்று அவர் தூரப் பார்வையினைப் பெற்றுக்கொள்ள முடியும். எனவே கால தாமதமின்றி மருத்து வரைச் சந்திக்க அறிவுறுத் துங்கள். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுத்
திறனாளிகள்
வாழ்வில்
மாற்றத்தை
ஏற்படுத்துமா?

*நவீன தொழில்நுட்ப மாற்றங்கள்*

# பார்வையற்றவர்களால் படங்களை உணர முடியுமா?

பொதுவாக சிமாட் திரைகளில் இருக்கும் படங்களைப் பார்வையற்றவர்களால் உணர்ந்துகொள்ள முடிவதில்லை. சிமாட் போன்கள் இதர சாதனங்களை இவர்கள் பயன்படுத்த ஒலி சமிக்ஞைகளோ வாசிப்பு மென்பொருட்களோ உதவுகரமாய் அமைகின்றன. ஆனால் இவற்றிலுள்ள படங்களினை உணர இதுவரை காலமும் தொழிநுட்பம் கைகொடுக்கவில்லை. எனினும் தற்பொழுது கண்டறியப்பட்டுள்ள BOE தொழிநுட்பம் கைகொடுக்குமானால் அது இவர்கள் வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும்.

பார்வையற்றோர தொடுதலின் மூலமாகவே சுற்றுப்புறச் சூழலுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இவர்கள் தமது கல்வியினைப் பிரெயிலி எனப்படும் குத்தெழுத்துக்களைப் பயன்படுத்தியே மேற்கொள்கின்றனர். இவ்வெழுத்துக்களை தொடுகை மூலமாக வாசித்துக் கற்கின்றனர். எனினும் இவ்வெழுத்து முறை தொழில்நுட்ப சாதனங்களினூடாக மாற்றுத் திறனாளிகளுக்கு அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கவில்லை. கிடைக்கக் கூடிய எலக்ட்ரானிக் பிரெய்ல் சாதனங்கள் மிகவும் விலை உயர்ந்தவை மற்றும் அவை காண்பிக்கக்கூடிய உள்ளடக்கத்தின் அளவு மற்றும் வகைகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்கு படங்களை உணர அனுமதிக்கும் புதிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி BOE காப்புரிமை பெற்றுள்ளது. சமீபத்திய BOE காப்புரிமை வணிக ரீதியாகக் கிடைத்தால் இது எதிர்காலத்தில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். சீனா தொழில்நுட்ப வலைப்பதிவில் Ithome சீன காட்சி நிறுவனம் காப்புரிமை பெற்றுள்ளதாக புதிய அறிக்கைகள் உள்ளன. தற்போதைய தீர்வுகளைப் போலன்றி, இது வரையறுக்கப்பட்ட உள்ளடக்கத்தை வழங்குவதோடு, மிகவும் மெதுவாகவும் இருக்கிறது. BOE தீர்வு வேகமானது மற்றும் பெரிய செயல்பாட்டு பகுதியைக் கொண்டுள்ளது. தீர்வு இரண்டு சாதனங்களைக் கொண்டுள்ளது: முக்கிய சாதனம் தொடுதிரை காட்சி, இது உங்கள் விரலில் அணியக்கூடிய சிறிய சாதனத்துடன் வேலை செய்கிறது.

ஒரு பயனர் ஒரு சிறிய தொட்டுணரக் கூடிய சாதனத்தை அணிந்து, ஒரு படத்தைக் காண்பிக்கும் சென்சார் சாதனத்தின் மீது ஒரு கையை ஸ்வைப் செய்யும்போது, சென்சார் தொட்டுணரக்கூடிய சாதனத்திற்கு தகவல்களைத் தொட்டுணரக்கூடிய பின்னூட்ட வடிவில் அனுப்பும், இது பயனரைக் காண்பிப்பதை "உணர" அனுமதிக்கிறது.



பார்வைக் குறைபாடுள்ளவர்கள் உரையுடன் தொடர்புகொள்வதைத் தாண்டி, பொதுவாக வடிவங்கள் மற்றும் படங்களுடன் செல்ல இந்த தீர்வு அனுமதிக்கும் என்று கூறப்படுகிறது.

BOE தீர்வை எந்த வகையான தொடுதிரை காட்சிகளிலும் உருவாக்க முடியுமா என்பது எங்களுக்குத் தெரியவில்லை. அப்படியானால், உற்பத்தியாளர்கள் இந்த தொழில்நுட்பத்தைத் தழுவி, அதைப் பார்க்கக்கூடியவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட அவர்களின் வழக்கமான சாதனங்களில் இணைத்துக்கொள்ளலாம், இதனால் பார்வைக் குறைபாடுள்ளவர்கள் அத்தகைய சாதனத்தை எடுத்துக்கொண்டு அதனுடன் தொடர்பு கொள்ள முடியும்.

காப்புரிமை ஜனவரி, 26 2022அன்று வெளியிடப்பட்டது. அதற்கான உற்பத்தியாளரின் திட்டங்கள் குறித்து எந்த தகவலும் இல்லை. இருப்பினும், விரைவில் வணிக சாதனங்களில் இதைப் பார்ப்போம் என்று நம்புகிறோம். காலப் போக்கில் இது பார்வையற்றவர்களுக்கும் பயன்தரக்கூடிய வகையில் பயன்பாட்டிற்கு வந்தால் இவர்களின் நீண்ட கால கனவொன்று நனவாகும்.

தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படுதழிகள் துளிர்ப்பதில்லை

சுகன்யா வாயிலுள்ள அத்தனை பற்களும் தெரிய என்னைப் பார்த்து சிரித்தாள். அது அவளுடைய வயதைச் சொல்லி என்னிடம் எதையோ கெஞ்சுவதாக எனக்குப்பட்டது. சில வேளை ஒன்றிரண்டு குட்டிப் பற்களும் இருக்கக்கூடும்.

ஆக அவளுக்கு வயது முப்பத்தைந்துக்கு முன்பின்னாக இருக்கலாம். ஐயோ சுகன்யாவை அவள் என்று சொல்லி விட்டேன். ரீச்சரை அப்படி அழைப்பது மரியாதை இல்லை. இருந்தாலும் இந்த ரீச்சர் எனக்குச் செய்ததும் மரியாதை இல்லாத வேலைதான். கள் விகுதியும், ஆர் ஆர் விகுதிகளையும் மரியாதைக்காகச் சேர்த்துக் கொள்ளலாம் என்று தெரிந்தும் மொட்டையிலே விட்டு விட்டேன்.

● சிறுகதை

நாவந்துழி சு.சிவராசா,

நான் ஒரு சைக்கிள் கடை வைத்திருக்கின்றேன். சைக்கிள் கடை என்றால் ஏதோ பெரிய வியாபாரம் என்று நினைத்தால் ஏமாந்து விடுவீர்கள். நான் வெறும் சைக்கிள் மெக்கானிக் தான்.

அடபாவமே கொம்புத் தேனுக்கு முடவன் ஆசைப்படுவது பழைய உதாரணம். இப்போதைக்கு அவன் ஹீரோ கொண்டா ஓடுவதற்கு ஆசைப்பட்டதாக கொள்ளலாம். விசயம் கொஞ்சம் சீரியசானது. எனக்கும் ஒரு கால் லேசாக பிரண்டு இருக்கின்றது. அதைக் காட்டிக் கொள்ளாமல் கஸ்ரப்பட்டு ஸ்ரெடியாக நடப்பது போல நடித்து விடுவேன்.

காலிரண்டும் பின்னப்பின்ன கன்னிமகள் நடைபயின்று வந்தாள் என்று கவிஞர் பாடினார். எனது கால்களிரண்டும் பின்னிப் பின்னி நடப்பதால் ஆண்மகன் என்று கன்னியர்களின் அங்கீகாரம் கிடைப்பது கஷ்டமாகி விட்டது. இந்த லட்சணத்தில் ஒரு அக்காவையும் ஒரு தங்கச்சியையும் நான் வாழவைப்பேன் என்று காத்திருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"
பழசுகள் எப்போதும்
எல்லாவற்றிற்கும் தொண
தொணத்துக் கொண்டுதான்
இருப்பார்கள். இவர்கள் சொன்ன
நியாயமான வார்த்தைகளின்
வெம்மையை வேலைப் பிராக்காகவே
எடுத்துக் கொண்டேன். ஆனால் சூடு
வாங்கிய பின்னர்தான் மூத்தோர்
வாய்ச்சொல் அமிர்தம் என்று
உணர்ந்து கொண்டேன். கண் கெட்ட
பிறகு சூரிய நமஸ்காரம் செய்ய
அவதிப்பட்டு ஆவது ஒன்றும்
இல்லை.
"

அப்பாவின் உழைப்பு தவறணைக்காரனின் கல்லாப் பெட்டிக்குள் முடங்கி விடும். அம்மாவின் கெட்டித்தனத்தாலும் சகோதரி களின் சொந்தக் கெட்டித்தனத்தாலும் இரண்டு திருமணங்களையும் சைக்கிள் மெக்கானிக் கடையை வைத்துக் கொண்டு நடத்தி முடித்து விட்டேன். திருமணங்கள் முடிந்ததோடு என்னுடைய வாழ்க்கையின் வசந்தகாலமும் முடியும் தறுவாய்க்கு வந்துவிட்டது.

புறோகிராம் பண்ணி முடுக்கி விடப் பட்ட இயந்திரம் போல என்னுடைய வாழ்க்கையில் நாட்களை சைக்கிளோடு கழுவித் துடைத்து பூட்டிக் கொண்டி ருந்தேன். அப்படியான ஒருநாளில்தான் சுகன்யா ரீச்சர் தன்னுடைய சைக்கிளை திருத்துவதற்காக கடைக்கு வந்தார். அவர் வேறு ஊரில் இருந்து மாற்றலாகி வந்திருக்கின்றார். அவரும் திருமணவயதைக் கடந்து விட்டவர் என்பதை ஓரளவு கட்டையாகிப் போன பின்னலில் ஊடும் பாவமாக ஓடும் வெள்ளிக் கம்பிகள் சொல்லிக் கொடுத்தன.

சைக்கிள் ரிப்பயரோடு தொடங்கிய தொடர்புகள் காற்று அடிக்க நட்டை இறுக்க, எண்ணெய் போட என்று எண்ணிக் கைகளைக் கூட்டிக் கொண்டு போனது. இந்த வேலைகளைச் செய்கின்ற போது பல விசயங்களையும் பரிமாறிக் கொண்டோம். ஒரு பெண்மையின் தேவைகள் அவளிடமும் முளாசி எரிய முடியாமல் புகைத்துக் கொண்டு கிடந்தது. எங்களது சளாப்பல்கள் ஊதிக் கொடுத்து நெருப்பை மூட்டி விட்டன.

வெறும் சைக்கிள் பாராக இருந்த எனது மனம் சில்லுகளை கொழுவிபெல்லையும் பூட்டி கிணுகிணுக்கத் தொடங்கி விட்டது. சும்மா கிடந்த சங்கை எடுத்து ஊதித்தள்ளி னேன். ஐம்பதிலும் ஆசை வரும் என்று அறியாமலா சொல்லி வைத்தார்கள். சுகன்யாவும் அப்படி இப்படி கதையிலேயே காலத்தை கடத்தி வந்தாள். ஓயில் பண்ணின சைக்கிள் கொஞ்சக் காலத்திற்குத்தான் ஒழுங்காக ஓடும். இப்போது சைக்கிளின் ஓட் டத்தில் சில கோளாறுகள் தெரிந்தன. எங்களது சந்திப்புக்களின் இடைவெளிகள் நீண்டன. இளமை மீண்டும் பெயர்ந்து நின்ற என்னுடைய நிலைமை விசயத்தை மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் குழப்பமாகிவிட்டது.

சைக்கிள் கடைக்கு பொழுது போக்கி வம்பளப்பதற்கு வயதில் மூத்த இரண்டொரு வர் வந்து போவார்கள். பழமும் தின்று கொட்டையும் போட்டவர்கள் என்னுடைய இரகசிய காதலை அறியாமல் இருப்பார் களா? அவர்கள் எனக்கு வாழ்க்கையின் யதார்த்தத்தை அடிக்கடி கதைகளாகச் சொல்லுவார்கள். சுகன்யாவின் விசயம் நிஜத் துக்கு ஒத்துப் போவது கஷ்டம் என்றும் எச்சரித்து இருந்தார்கள்.

பழசுகள் எப்போதும் எல்லாவற்றிற்கும் தொண தொணத்துக் கொண்டுதான் இருப்பார்கள். இவர்கள் சொன்ன நியாயமான வார்த்தைகளின் வெம்மையை வேலைப் பிராக்காகவே எடுத்துக் கொண்டேன். ஆனால் சூடு வாங்கிய பின்னர்தான் மூத் தோர் வாய்ச்சொல் அமிர்தம் என்று உணர்ந்து கொண்டேன். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்ய அவதிப்பட்டு ஆவது ஒன்றும் இல்லை. இருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடுவாங்கிய காட்சிகளை பிளாஷ்பாக்கில் இடை இடையே போட்டுப் பார்த்திருக் கின்றேன்.

இந்த உலகத்தில் எல்லாமே காரண காரியத்தோடு தான் நடந்து கொண்டு இருக் கின்றது. கண்ணன் காட்டிய கார்யோகம் கலண்டர்களாக வீடுகளிலும் கடைகளிலும் சீதாசாரமாய் தொங்கிக் கொண்டு இருப்பதோடு சரியாகி விடுகிறது. சுகன்யா விடம் நான் வாங்கிக்கொண்ட சூட்டினு டைய காரணகாரியம் ஒரு பக்கமாக பார்த்தால் நியாயமானதாக இருக்கும். இருந்தாலும் நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. ஆனால் இதிலும் ஒரு வேடிக்கை இருக்கின்றது. சமூகத்தினு டைய நியாயப்படுத்தல்கள் பெண்களுக்குச் சார்பாகவே பெரும்பாலும் இருக்கின்றது. அதனால் இங்கே நான் காட்டுகின்ற என்னுடைய நியாயங்கள் எடுபடாமல் அடிபட்டுப் போகின்றன. பச்சைக் கண்ணாடிக்காரனுக்கு பார்ப்பதெல்லாம் பச்சைதான் தெரியும். கண்ணாடியைக் கழற்றி வைத்து விட்டு ஒருகணம் என்னைப் பாருங்கள்.

இந்த சுகன்யாவும் ஒரு சராசரிப் பெண் தான். பெண்மை உயரத்திலிருந்தாலும், பள்ளத்தில் கிடந்தாலும் திருமணம் குழந்தை என்ற இலக்கிலேயே பூரணமாகிறது. ஆனால் பெண்ணியம், கண்ணியம் என்று எத்தனையோ விஷயங்களைப் பேசியும் எழுதியும் வருகிறார்கள். புதுமைப் பெண் என்பதை புரிந்து கொள்ளாமல் விக்கி வாந்தி எடுக்கிறார்கள். சொல்ல வந்ததை விட்டு இன்னும் விலகிப் போய் விடவில்லை.

இருபத்தைந்து அல்லது முப்பதுக்குள் பெண்மையின் பூரணத்துவம் கிடைக்கப் பெற வேண்டும். பெண்ணியத்தின் அரிச்சுவடியே இதுதான். அதற்கு மேல் வயதுகள் ஏறஏற இலக்கை அடைவதற்கு வேறு வேறு வழிகளைப் பெண்மை தேடத் தொடங்குகின்றது.

சுகன்யாவின் தேடுதல் வேட்டையில் நானும் குறிவைக்கப்பட்டேன். என்னுடைய இளக்காரத்தை தேவைப்பட்டால் இறுதி முடிவு எடுக்கப்படும்போது பயன்படுத்திக் கொள்ளலாம். கடலின் ஆழத்தை அளந்தவ னுக்கும் கயிறு கொடுக்கின்றது பெண்ணின் ஆழம் என்பதை காலம் கடந்து அறிந்து கொண்டேன். சுகன்யாவுக்கு ஒரு வாத்தியார் மாப்பிள்ளை வாய்த்துவிட்டார். திருமண அழைப்பையும் அக்கறையோடு அனுப்பி இருந்தாள்.

எல்லாம் முடிந்து ஒரு வருடம் ஓடி விட் டது. தனது வாத்தியார் கணவரோடு ஹீரோ கொண்டாவில் போகும்போது எனது கடைப்பக்கம் சில வேளைகளில் திரும்பிப் பார்க்கிறார். அந்தப்பார்வையின் பொருள் என்ன என்பதை என்னால் அறிய முடியவில்லை. பெரும்பாலும் சைக்கிள் கடையோடுதான் எனது எஞ்சிய வாழ்நாள் கழிந்துவிடக்கூடும். இன்றைய நடைமுறை வாழ்வின் அட்டகாசங்களுக்கு ஈடு கொடுக்க உடல் வலு அற்றவனுக்கு சிரமம்தான். மனப்பொருத்தம் என்பது பணப்பொருத்தம் என்றாகிவிட்டது.

ஆனால் தாங்கள் நாலுபேர் மெச்சும்படி வாழ வேண்டும் என்றுதான் எல்லோரும் விரும்புகின்றார்கள். தியாகம், காதல், அன்பு என்ற விசயங்கள் கடைச்சரக்காகி விட்டன. ஆனால் உணர்வுகள் செத்துப் போய்விட்ட னாவா? உடல் உறுப்புக்களில் ஒன்று ஊனமாகிவிட்டால் உணர்வுகளும் ஊன மாக வேண்டுமென்ற அவசியம் இல்லை. என்னைப் போன்றவனுக்கும் உலக ஆசாபாசங்கள் இருக்கின்றது என்பதை சமூகம் ஏற்றுக் கொள்ள மறுப்பது வேதனைதான்.

படைச்சவன் படி அளப்பான் என்று சொல்லுகிறார்கள். திருமணம் சொர்க்கத் தில் நிச்சயிக்கப்படுகின்றது என்கிறார்கள். இதெல்லாம் பத்தாம் பசலித்தனம் நடைமுறையில் ஆணாதிக்கம் விட்டுப் போகாததைப்போலத்தான் உடல் வலுக் குறைந்தவர்கள் எடுப்பார். கைப்பிள்ளை யாக இருக்க வேண்டிய நிலைமையும் மாறப் போவதில்லை. அதுவரையில் சில சுகன்யாக் கள் படுதடிகளை துளிர்க்கவைக்கலாமா என்று கவலைப்பட்டு சறுக்கிக் கொண்டு தான் இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 2773-6865
9 772773 686002

# அறிந்திரன்

சிறுவர் சஞ்சிகை

இதழ்-06
டிசம்பர் - 2021

30/-



உலகைப் பறக்க வைத்தவர்கள்



எது தேவை?




முல்லா கதைகள்

அறிந்திரு அதுவே அருந்திரு

அறிந்திரன்
சிறுவர் சஞ்சிகை
மாத இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




New Evergreen Printers (Pvt) Ltd., Jaffna. Tel: 021 221 9893
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org